மே 2012-2

இது ஒரு மாத இதழ்

விலை ரூபா 100/=

# தின முரசு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தின மகுடி

### வாசக நெஞ்சங்களோடு

தினமகுடியின் கன்னி பிரசவத்திற்கு நீங்கள் வழங்கிய ஆதரவு எம்மை ஆச்சரியத்திற்குள் ஆழ்த்தியுள்ளது! முதற்கண் வாசகர் நெஞ்சங்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும்.
ஆதரவுக்காக வார்த்தைகளை அள்ளிவழங்கிய உங்கள் உணர்வுகளில் தினமகுடி என்ற பெயர்குறித்த விளக்கம்கோரும் விருப்பங்கள் அதிக இடத்தை பிடித்தமையை அறிய முடிந்தது.

உணர்வோடு உறவோடு நீங்கள் முன்வைத்த கேள்விக்குப் பதில் தரவேண்டிய நமது பொறுப்பு என்பதை உணர்கின்றோம்.
மாதாந்தம் மலரும் ஒரு சஞ்சிகைக்கு ஏன் இந்த தினமகுடி என்றபெயர் என்பது நியாயமான உங்களது கேள்வியாகும்.

சம்பவங்கள் தினந்தோறும் நடக்கின்றன அவை செய்திகளாக, தகவல்களாக அன்றன்றே அகிலம் எங்கும் பரவுகின்றன படைப்புகள் தினம்தோறும் பிறக்கின்றன அவை பிரதிகளாக வெளிவருகின்றன.

இவற்றில மனதில் பிடித்ததை நெஞ்சில் கடித்ததை உணர்வில் தொட்டதை மாதம் ஒரு முறை உங்கள் மனங்களில் பதியச் செய்வதே எமது விருப்பமாகும்.
இந்தப் பதிவு மகுடியாக- ஊதுகுழலாக உங்கள் எண்ணங்களில் இடம்பிடித்து ஆடுமானால் அதுவே இந்த முயற்சியின் வெற்றியாகும். இந்த வெற்றிக்கு உங்கள் முழுமையான ஆதரவு கரம் நீளும் என்ற நம்பிக்கையில் இதோ எமது இரண்டாவது பதிப்பு.

**ஆசிரிய பீடம் தினமகுடி**
**இல. 238 கடற்கரை வீதி**
**கொழும்பு-11**

தொலை பேசி : 011 3137921
தொலைநகல் : 011334633
gmail thinamakudis@gmail.com





## அதிசய வான்

இது ஒரு வான் தான். ஆனால் இதன் உள் வடிவமைப்பு தனியாருக்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஜெட் விமானம் போல் உள்ளது. இந்த ஆடம்பர வானின் பெறுமதி 280,000 ஸ்டேர்லிங் பவுண்கள் ஆகும். இந்த வானுக்குள் 40 இஞ்சி தொலைக்காட்சியும், 1,300 watt பெறுமதி கொண்ட நவீன ஓடியோ செட்டும் உள்ளது. பெரிய பெரிய பிசினஸ் செய்யும் தலைகளுக்காக வானுக்குள் இருந்தபடியே வீடியோ கொன்பிரன்ஸ் மூலம் பேசும் அரிய வசதியும் உள்ளது. இந்த வானுக்குள் 500-gigabyte கொம்பியூட்டரும் உள்ளமை இதன் சிறப்பாகும். இந்த வானுக்கு ரைகர் வூட்ஸ் போன்ற பிரபலங்கள் அடிமையாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## விநோத ஹோட்டல்


விடுமுறையை உற்சாகமாகக் கழிக்க நினைப்பவர்களுக்கு இதை விட வேறு ஏதும் இருக்க முடியாது. எப்போதும் விமானத்தில் பறந்தபடியே தங்களது விடுமுறையை சந்தோசமாகக் கழிக்க நினைப்பவர்களுக்கு இந்தக் ஹோட்டல் பெரிய வரப்பிரசாதமாக அமையும்.

இந்த விநோத ஹோட்டல் ஆனது காட்டின் நடுவே அமைந்துள்ளது. குறித்த விமானத்தின் வடிவமைப்பானது Boeing 727 ரக விமானத்தின் வடிவமைப்பை ஒத்தது.

இந்தக் ஹோட்டலின் உருவாக்கத்துக்கு பிரபல Forbes Magazine தான் காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

இது ஒரு வித்தியாசமான ஒரு வகையான உலகம் என்று குறித்த ஹோட்டலின் உரிமையாளர் கூறினார். Costa Rica இல் அமைந்துள்ள இந்தக் ஹோட்டலுக்கு Costa Verde என்று பெயரிடப் பட்டுள்ளது.





# முற்றுகிறது முரண்பாடு

இலங்கை தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் வெளியுலகிலிருந்து அரசாங்கத்திற்கு வரக் கூடிய நெருக்கு தல்களே தங்களது மீட்சிக்கான பாதையை திறந்து விடும் என்று நம்புகின்றனர். கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலான இவர்களது உரிமைகளுக்கான போராட்டம் இறுதியாக தந்துள்ள நிலையே இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனித்துக் கொண்ட தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் இந்த நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், இது மௌனிக்கப்பட்டதால் தற்போது வெளிகிளப்பியுள்ள நிலைமைகளும் - தன்மைகளும் சாஸ்தவமானவை அல்ல என்பதும் அவர்களால் உணரப்பட்ட யதார்த்தங்கள் ஆகும்..

இந் நிலையில் தமது தரப்பிலான ஜனநாயக சக்திகளை வலுப்படுத்தியே ஆக வேண்டும் என்ற உணர்வு இவர்களிடம் மேலோகிய போதும் இந்த சக்திகள் மக்களின் எண்ணங்களை புரிந்து கொண்டு செயற்படும் நிலையில் இல்லை என்பதே உண்மையாகும்



இனவிவகாரம் குறித்து பேசுவதற்கு அரசாங்கம் இச் சக்திகளை அழைத்துப் பேச்சு நடத்தியது. 13 சுற்றுக்கள் நடைபெற்ற இந்தப் பேச்சுகளில் என்ன பேசப்பட்டன. எதை எதை அரசதரப்பு ஏற்றுக் கொண்டது - நிராகரித்தது என்பன போன்ற விடயங்கள் தமிழ் மக்களுக்குத் தெரியவரவில்லை எல்லாமே மூடு மந்திரமாக நடை பெற்றது.

தமிழர் அரசியல்தரப்பின் இந்த நிலை குறித்து உணர்ந்து கொண்ட தமிழ்மக்களின் சிவில் சமூகம் உரிய நேரத்தில் தனது கடமையைச் செய்யத் தலைப்பட்டது அரசுடன் நடத்தப்படும் பேச்சுகளின் விபரத்தை அவ்வப்போது மக்களுக்கு அறியத் தரவேண்டும் என்ற அவர்களது கோரிக்கையும் நியாயத்தை நிலை நிறுத்தி நின்றது.

இந் நிலையில் நாடாளுமன்றத் தெரிவிக்குழு ஒன்றின் முக்கியத்துவம் உணரப்பட்டு இதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னேடுப்பதற்கான நிலைப்பாடு முன்வைக்கப்பட்டது. இதனை ஏற்க மறுத்தது தமிழர்களின் அரசியல் தரப்பு. இந்நிலையில், நடைபெற்று வந்த பேச்சுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதன் தொடாச்சியாக ஜெனீவாவில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானமும் இதனால் ஏற்பட்ட விமர்சனங்களும் - வில்லங்களும் இது வரை பேச்சை தொடர்வதற்கான நிலைமையை ஏற்படுத்தவில்லை.

இந்நிலையில் இந்தியாவின் ஆளும். எதிர்கட்சிகளின் நாடாளுமன்றத் தூதுக்குழு ஒன்று கடந்த எப்ரல் 18 ஆம் திகதி இலங்கை வந்தது. இக்குழுவினர் இங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்து பல முக்கிய சந்திப்புகளை நடத்தி - முக்கிய இடங்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இலங்கை வாழ் தமிழ் மக்களின் நிலைமை குறித்து அறிவதே அவர்களின் பிரதானமான நோக்கமாக இருந்தது.

இக்குழுவுக்குத் தலைமை தாங்கியிருந்த இந்தியாவின் எதிர்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜ் காத்திரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் கருத்துகளையும் முன் வைத்துதிருக்கிறார்.

இந்நிலையில் இந்தக்குழவை தமிழ் அரசியல்தரப்பு சந்தித்தமை தொடர்பில் இப்போது கூட்டமைப்புக்குள் குத்து வெட்டுகள் ஆரம்பமாகியுள்ளன என உள் வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறிப்பிட்ட சிலர் மட்டுமே இவ்வாறான சந்திப்புகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் குறிப்பாக கூட்டமைப்பிலுள்ள தமிழரசுக் கட்சிக்காரர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகின்றது என்ற முரண்பாடு இப்போ வலுபெற்று வருதாக அறிய முடிகிறது. அதனை உறுதிப்படுத்துமாற்போல் அண்மையில் நிகழ்ந்தேறிய மேதினக் கூட்டமும் அதன் பின்னரான விமர்சனங்களும் அமைந்திருக்கின்றன.

மொத்தத்தில்தமிழ் கூட்டமைப்புகள் முரண்பாடுகள் முற்றுகின்றன என்பதே உண்மை.





# சந்தைக்கு வருகிறது பறக்கும் கார்



அமெரிக்க நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பறக்கும் கார் சோதனை ஓட்டம் வெற்றிகரமாக முடிந்துள்ளது. எனவே இந்த கார் விரைவில் விற்பனைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த பிரபல விமான தயாரிப்பு நிறுவனம் டெரபியூஜியா. மசாசூசட்ஸ் மாநிலம் வூபர்ன் நகரை தலைமையிடமாக கொண்டது.

ரேஸ் கார்கள், சிறிய ரக விமானங்கள், விமான பாகங்கள் ஆகியவற்றை தயாரித்து வருகிறது. தரையில் மட்டுமின்றி வானத்திலும் செல்லக்கூடிய காரை உருவாக்கும் ஆராய்ச்சியில் இந்நிறுவனம் 2006ஆம் ஆண்டு ஈடுபட்டது.

கடந்த 2009ஆம் ஆண்டில் தயாரிப்பு பணிகள் முடிந்த பின், பல கட்டமாக இதன் சோதனை நடந்து வந்தது. டிரான்சிஷன் என்று இந்த காருக்கு பெயரிடப்பட்டது.

இதை வர்த்தக ரீதியாக உற்பத்தி செய்ய அமெரிக்க தேசிய ஹைவே பாதுகாப்பு அமைப்பு கடந்த ஜூலையில் அனுமதி அளித்தது. இதையடுத்த சோதனை ஓட்டம் அமெரிக்காவின் நியூயார்க் மாநிலத்தில் உள்ள பிளாட்ஸ்பர்க் விமான நிலையத்தில் கடந்த 23ஆம் திகதி நடத்தப்பட்டது.

டெரபியூஜியா நிறுவனத்தின் தலைமை சோதனை பைலட் பில் மிட்டீர் ஓட்டிச் சென்றார். முதலில் தரையில் வழக்கமான கார் போல ஓடிச் சென்றது.

சிறிது நேரத்தில் கார் கதவுகள் போல இருந்த இறக்கைகள் இரு பக்கமும் விரிந்தன. மெல்ல உயர எழும்பிய கார் 8 நிமிடத்துக்கு 1400 அடி உயரம் வரை பறந்து பத்திரமாக தரையிறங்கியது.

சோதனை வெற்றிகரமாக முடிந்திருப்பதாக டெரபியூஜியா நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அன்னா டிட்ரிச் தெரிவித்துள்ளார்.

சோதனை ஓட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு, தேவைப்படும் மாற்றங்கள் செய்யப்படும். அடுத்த ஆண்டுக்குள் சந்தைக்கு கொண்டு வர முயற்சி செய்து வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

கார் விலை ரூ.1.42 கோடி. ஓடர் கொடுக்க விரும்புபவர்கள் ரூ.5 இலட்சம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 2 சீட்கள் உள்ளன. ஓட, பறக்க அன்லெடட் பெட்ரோல் போதும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆபத்தான வெற்றியா?

சிறுபான்மை மக்களின் ஆயுதக் குழுக்களுக்கும் ராணுவத்துக்கும் இடையே ஓயாத சண்டை நடக்கும். இதனால் ஆயிரக்கணக்கான சிறுபான்மை மக்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தேர்தலில் பங்கேற்கப் போவதாக ஆங் சான் சூகி அறிவித்தது மாபெரும் வரலாற்று நிகழ்வு. உறுதியளித்தபடி இடைத் தேர்தலை நடத்தியதும் இராணுவப் பின்புலம் கொண்ட மியான்மார் அரசின் சாதனைதான்.

நூதன முறையிலான மோசடிகள், அரசே தன்னிச்சையாக நியமிக்கும் அதிகாரிகளைக் கொண்ட தேர்தல் ஆணையம் என்பன போன்ற பல குறைபாடுகள் இருந்தாலும்கூட மியான்மாரின் ஜனநாயகம் நோக்கிய பாதையில் இந்தத் தேர்தல் ஒரு மைல்கல் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

சர்வதேசப் பார்வையாளர்களுக்கு அனுமதியளித்தது, ஊடகங்களுக்குச் சுதந்திரம் அளித்தது போன்றவற்றில் அதிபர் தெய்ன் செயின் இராணுவ ஆட்சியாளர்களிடமிருந்து மிகவும் வித்தியாசமானவராகக் கவனிக்கப்படுகிறார். அரசியல் கைதிகளை விடுவித்தது, சுற்றுச் சூழல் ஆர்வலர்களின் கோரிக்கையை ஏற்று சீன உதவியுடனான அணைகட்டும் திட்டத்தை ரத்து செய்தது, தொழிற்சங்கங்களுக்கு அனுமதியளித்தது போன்றவை அதிபர் செய்த மாபெரும் புரட்சி நடவடிக்கைகள்.

கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுக் காவலில் இருந்தே பழக்கப்பட்ட, ராணுவ ஆட்சியாளர்களின் கொடுமையை நேரடியாக அனுபவித்து வந்த சூகியே தெய்ன் செயின் மீது நம்பிக்கை வைத்திருப்பதாகத் தெரிவிக்கும் அளவுக்குச் சீர்திருத்தங்கள் நடந்தன. ஆனால், இந்தச் சீர்திருத்தங்களில் எதுவும் செயினுக்குச் சாதகமாக இருக்கப்போவதில்லை. மேற்கத்திய ஊடகங்கள் இவரை சோவியத் யூனியனின் மிகையீல் கோர்ப்பசோவுடன் ஒப்பிட்டு கேலி செய்கின்றன. இராணுவப்பலம் கொண்ட கடைசி ஆட்சியாளர் இவர்தானாம்.

மியான்மாரில் இப்போது நடந்து முடிந்திருப்பது சிறிய அளவிலான இடைத்தேர்தல் தான்.

அரசியல் சட்டப்படி எல்லா அவைகளிலும் ராணுவத்துக்கு 25 சதவிகிதப் பிரதிநிதித்துவம் உண்டு. நாடாளுமன்றத்தில் கீழவை, மேலவை சேர்த்து மொத்தமுள்ள 664 இடங்களில் இப்போது வெறும் 7 சதவிகித இடங்களுக்குத்தான் தேர்தல்நடந்திருக்கிறது.

எல்லா தில்லுமுல்லுகளையும் தாண்டி, தேர்தல் நடைபெற்ற 45 இடங்களில் 40இடங்களைச் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி வென்றிருக்கிறது. ராணுவ ஆட்சிமீதான வெறுப்பை மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் காட்டிவிட்டார்கள்.

சூகியின் இத்தனை கால காத்திருப்புக்குக் கிடைத் திருக்கும் இந்த வெற்றியை உலகமே கொண்டாடுகிறது. ஒரு இடைத்தேர்தல் வெற்றிக்கு இவ்வளவு பெரிய கொண்டாட்டங்கள் தேவைதானா?

ராணுவம், ராணுவ ஆதரவு கொண்ட தேசிய ஒருமைப்பாடு மற்றும் மேம்பாட்டுக் கவுன்சில், சூகியின் தேசிய ஜனநாயக லீக் ஆகிய கட்சிகளைப் பற்றி மட்டும்தான் கடந்த சில மாதங்களாக ஊடகங்கள் பேசின. அதுவும் தேர்தலில் போட்டியிடுவதாக சூகி அறிவித்ததும், அவருக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து செய்திகள் வெளியாகின.

நாடு முழுவதும் எழுந்த சூகி ஆதரவு அலையையும் தாண்டி ஷான் கட்சி ஓர் இடத்தில் வெற்றி பெற்றிருக்கிறது. ஷான் சிறுபான்மையின மக்கள் அதிகமாக வசிக்கும் ஷான் மாநிலத்தில் செல்வாக்குப் பெற்றது இந்தக் கட்சி. இந்த இடத்தில் சூகியின் கட்சி தோற்றுப் போயிருக்கிறது.

ஷான் தவிர, கச்சின், கரேன் என்பன போன்ற பல சிறுபான்மை இன மக்கள் நாட்டில் வசித்து வருகின்றனர். ராணுவம் ஆட்சியில் இருந்த காலகட்டத்தில் பெரும்பான்மையினரான பாமர் மக்கள் அனுபவித்த கொடுமைகளைவிட சிறுபான்மை மக்கள் தான் அதிகமாகக் கொடுமைகளை அனுபவித்திருப்பதாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

சிறுபான்மை மக்களின் ஆயுதக் குழுக்களுக்கும் ராணுவத்துக்கும் இடையே ஓயாத சண்டை நடக்கும். இதனால் ஆயிரக்கணக்கான சிறுபான்மை மக்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தெய்ன் செயின் அதிபரான

**“மியான்மருக்கு எதிரான அனைத்து வகையான பொருளாதாரத் தடைகளையும் விலக்கிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தின.”**

பிறகு பல போர் நிறுத்த ஒப்பந்தங்கள் போடப்பட்டன. அவற்றில் பல அமுலில் இருந்தாலும் சிறுபான்மை மக்கள் அவற்றை நம்புவதற்குத் தயாராக இல்லை. கச்சின் போன்ற சில இனக்குழுக்களுடன் இப்போதும் தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது. இந்தச் சூழலில்தான் இடைத்தேர்தல் நடந்து முடிந்து சூகி வெற்றி பெற்றிருக்கிறார். இந்த வெற்றி ஜனநாயகத்தைக் கொண்டுவரும் முயற்சி என்றாலும், கூடவே ஓர் ஆபத்தும் வந்திருக்கிறது. மியான்மாருக்கு கிடைத்திருக்கும் சர்வதேச ஆதரவுதான் அந்த ஆபத்து. தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டார் என்று தெரிந்தவுடன் உலக நாடுகள் அனைத்துமே சூகிக்கு வாழ்த்துத் தெரிவித்தன. அத்துடன், மியான்மாருக்கு எதிரான அனைத்து வகையான பொருளாதாரத் தடைகளையும் விலக்கிக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தின.

ஆசிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் என்ற பாரபட்சம் இல்லாமல் எல்லா நாடுகளின் கோரிக்கையும் இதுவாகத்தான் இருந்தது. இதைத்தான் பலர் ஆபத்து என்கிறார்கள். இன்னமும் ராணுவம்தான் ஆட்சியில் இருக்கிறது. அடுத்து தேர்தல் வந்தாலும் ராணுவ அதிகாரிகளில் 25 சதவிகிதம் பேர் நாடாளுமன்றத்தில் வீற்றிருக்கப் போகிறார்கள். ஒப்புக்கொண்டபடி, 2015இல் தேர்தலை நடத்தினாலும், 1990இல் செய்தது போல இன்னொரு முறை ராணுவம் நடந்து கொள்ளாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# அரசியலுக்கு வருவாரா சச்சின்?

, ந்திய மாநிலங்களவை நியமன உறுப்பினராக சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளார். இலக்கியம், அரசியல், பத்திரிகை, விளையாட்டு என பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு மாநிலங்களவை நியமன உறுப்பினர் பதவி வழங்க இந்திய அரசியல் அமைப்பு சட்டம் வகை செய் கிறது.

இந்த வகையில் விளையாட்டு துறையில் பல சாதனைகள் புரிந்துள்ள டெண்டுல்கருக்கும், சினிமா துறையில் பல்வேறு விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றுள்ள ஹிந்தி நடிகை ரேகாவுக்கும் நியமன எம்.பி பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதனை டெண்டுல்கர் ஏற்றுக் கொண்டுள்ளார். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை அன்மையில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.


டெண்டுல்கருக்கு எம்.பி. பதவி கொடுக்கப்பட்டிருப்பதற்கு பல்வேறு தரப்பில் இருந்து ஆதரவும் சிலரிடம் இருந்து எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. டெண்டுல்கருக்கு எம்.பி பதவி வழங்கப்பட்டிருப்பதற்கு மகாராஷ்டிரா நவநிர்மாண் கட்சி தலைவர் ராஜ்தாக்கரே வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதற்கு அரசியல் சாயம் பூசக் கூடாது எனவும் தெரிவித்துள்ளார். பா.ஜ. ஆட்சியின்போது பிரபல பாடகி லதா மங்கேஷ்கருக்கு எம்.பி பதவி கொடுக்கப்பட்டது. அதை யாரும் எதிர்க்கவில்லை என்று ராஜ்தாக்கரே கருத்து தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, காங்கிரஸிடமிருந்து டெண்டுல்கர் விலகி இருக்க வேண்டும் என சிவசேனா எச்சரித்துள்ளது. இது குறித்து அக்கட்சியின் எம்.பி சஞ்சய் ராவுத் கூறுகையில்,

"மகாராஷ்டிராவில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசு பல்வேறு ஊழல்களில் சிக்கி தவித்து வருகிறது. சரிந்து கிடக்கும் செல்வாக்கை மீட்பதற்காக டெண்டுல்கரை பயன்படுத்திக் கொள்ள பார்க்கிறது காங்கிரஸ்.

அரசியல் விஷயங்களில் டெண்டுல்கர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காங்கிரஸிடமிருந்து விலகி இருக்க வேண்டும்" என்றார். சிவசேனா எம்.பி.யின் கருத்து மும்பை அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்காக ஏன் சேவைகள்

ஒவ்வொரு வாரமும் புதன் சனிக்கிழமை தினங்களில் கொழும்பு செட்டியார் தெரு கொச்சிக்கடைச் சந்தி மக்கள் கூட்டத்தால் நிறைந்திருக்கும். கையில் குழந்தைகளுடனும் தள்ளாத வயதினில் கைப்பிடித் துணைகளுடனும் சகல தரப்பட்ட மக்களும் இங்கு கூடுவதை நாம் பார்க்கலாம்.

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் மேன்மைக்காக நவோதயம் அமைப்புகள் மேற்கொள்ளும் இந்த அரிய சேவை பார்ப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும்.

ஆனால் உண்மை. இந்த சேவையில் பிரதான கர்த்தா எஸ்.கே.கிருஷ்ணாவோடு தின மகுடிக்காக ஒரு சந்திப்பு...

**உங்களுக்கு இவ்வாறு சமூகசேவை செய்யவேண்டும் என்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?**

நான் சாதாரண குடும்பத்திலிருந்து எனது முயற்சி மூலம் வர்த்தகத் துறையில் முன்னேறியவன். இந்த துறையில் ஆரம்ப காலத்தில் நான் பல்வேறு இடையூறு களைச் சந்தித்தவன். இந்த அனுபவம் வாழ்க்கையில் கஷ்டம் என்பது எத்தகைய கொடியது என்பதை எனக்குள் உணரச் செய்திருந்தது. இந்நிலையில் கஷ்டப்படும் எவரை கண்டாலும் உதவி செய்வேன். இரங்குகின்ற மனம் எனக்குள் இயற்கையாக இருந்தது. அதுதான் என்னவோ இந்த சமூக சேவைக்குள் என்னை இழுத்துவந்தது எனலாம்.

**இவ்வாறு ஒரு அமைப்பு மூலம் அதனை செய்யவேண்டும் என்ற நாட்டம் எப்படி ஏற்பட்டது?**

வர்த்தகத் துறையில் நான் சிறிது முன்னேறிய கால கட்டங்களில் அவ்வப்போது கஷ்டப்பட்டவர்களுக்கு உதவி-களைச் செய்து வந்தேன். அதனை என்னுடன் உறவாடிய நண்பர்கள் அறிவார்கள் தனிப்பட்ட முறையில் இவ்வாறு ஒரு திட்டமிடப்படாத முறையில் மேற்கொள்ளும் இந்த உதவிகளை ஒரு அமைப்பின் கீழ் திட்டமிட்ட முறையில் செய்தால் என்ன என்று அவர்கள் தந்த சிந்தனைதான் நவோதயம் என்ற இந்த அமைப்பு உருவாகக் காரணமாகியது. இதற்கு எனது சகோதர, சகோதரிகளும் ஒத்தாசை புரிந்தனர் இதுவே எனது பணி தொடரக் காரணமாகியது.

**நவோதயம் அமைப்பின் ஊடாக இதுவரை நீங்கள் முன்னெடுத்துள்ள பணிகள் எத்தகையை நிலையை உங்களுக்கு உருவாக்கியுள்ளன.**

கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்த அமைப்பின் மூலமாக பல்வேறு உதவிவழங்கும் பணிகளை முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக வறுமைக் கோட்டுக்கு கீழ்வாழம் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்குப் பல்வேறு உதவிகளை செய்து வருகிறோம். ஆனாலும் இத்தகைய பணிகளுடாக அவ்வப்போது இந்த மக்களுக்கு ஏற்படும் முட்டுக் கட்டைகளைத்தான் தீர்க்க முடிகிறது. எனினும் அவர்களது பிரச்சினைகள் குறித்து அறியும் போது இவர்களது தேவைகளை முழமையாக பூர்த்தி செய்கின்ற நடைமுறைகளுக்கு அரசியல் பலம் இருக்க வேண்டியது அவசியம் என்ற நிலையை உருவாக்கியுள்ளது.

**இந் நிலையில் உங்களது அடுத்த கட்ட முயற்சி?**

நானும் அரசியலில் அடியெடுத்து வைக்கிறேன். நவோதயம் மக்கள் முன்னணி என்ற புதிய கட்சி ஒன்றை நாம் இப்போது உருவாக்கியுள்ளோம் . இந்த கட்சியின் பிரதான நோக்கம் வறுமைக்கோட்டுக்குள் வாழும் அனைத்து தரப்பு மக்களின் மேம்பாட்டுக்கு உதவுவதாகும். இந்த இலக்கை நாம் அடையும் வரையில் எமது பணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இதுவே எனது அடுத்த கட்ட முயற்சியாகும்.



# நானும் அரசியலில் அடி எடுத்து வைக்கிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றுகிறதாம் நச்சுப் பொய்கை

மகாபாரதத்துடன் தொடர்புடைய இரண்டு செய்திகள் அண்மையில் ஊடகங்களில் வெளியாகின. முதலாவதாக, பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கடஸ்ராஜ் சிவன் ஆலயத்தில் உள்ள நச்சுப்பொய்கை வற்று கிறது என்பது. இரண்டாவது, உத்தரப் பிரதேச மாநிலம், பாராபங்கி மாவட்டத்தில் உள்ள கிந்தூர் கிராமத்தில் இருக்கும் சிவன் கோயிலின் பாரிஜாத மரம் பட்டுவிட்டது என்பது.

நீர் அருந்த நச்சுப்பொய்கைக்குச் சென்ற பாண்டவர்களில் நால்வர்கள், அதைப் பாது காத்து நின்ற பூதத்தின் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் மயக்கமுற, தருமர் அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளித்து மீட்டு வந்ததாக மகாபாரதத்தில் ஒரு கட்டம் வரும்.

"யட்சப் பிரஸ்னம்" என்று சொல்லப்படும் அந்தக் கேள்வி பதில்கள் பல உள்ளார்ந்த தத்துவங்களை வெளிப்படுத்துவதாக அமை யும். கோன் பனேகா குரோர்பதி, டீலா நோ டீலா, கோடீஸ்வரர் ஆகலாம் போன்ற இன்றைய வெற்றிபெற்ற ரிவி நிகழ்ச்சிகளுக்கெல்லாம் முன்னோடி இந்த வினா-விடை போட்டி.

அதேபோன்று பாஞ்சாலி கேட்டதற்காக பாரிஜாத மலரை வீமன் தேடிக் கொண்டு வந்த தாக மகாபாரதம் சொல்கின்றது. தாய் குந்தியின் வழிபாட்டுக்காக பாரிஜாத மரத்தையே அர்ஜ னன் கொண்டுவந்ததாகவும், அதனைக் குந்தி இங்குள்ள சிவன் கோயிலுக்கு அளித்துவிட் டதாகவும் மரபுவழியிலான மகாபாரத கிளைக் கதைகள் சொல்கின்றன. கிராமத்தின் பெயரே (கிந்தூர்) குந்தி என்பதன் திரிபுதான் என்கிறார் கள்.

இந்தியாவில் பிற இடங்களில் மிக அரிதாக பாரிஜாத மரங்கள் இருந்தாலும்கூட, கிந்தூரில் உள்ள பாரிஜாத மரம் பல வகையிலும் மாறுபட் டது. பூக்கள் பூக்கும் தருணம் அந்தச் சூழலே ரம் யமாக மாறிவிடுமாம். மணம் பரப்பும் வெண் மையான மலர்கள் உதிரும்போது பொன் நிற மாக மாறிவிடும் என்கிறார்கள்.

இதன் பூக்கள் காயாகி விதையாவதில்லை. இதன் கிளைகளைக் கொண்டு பதியம் போட்டு மரம் வளர்க்கலாம் என்றால் அதுவும் நடை-பெறவில்லை. ஏனென்றால், பாரிஜாத மரத்தில் இது ஆண் வகை. உலகத்திலேயே இந்த வகை பாரிஜாத மரம் ஒன்று தான் இருக்கிறது என்கிறார்கள் தாவர வியல் வல்லுநர்கள்.

**படித்துப் பட்டம் பெற்றதாலேயே புத்திசாலிகளாகி விட்டதாகக் கருதும் நம்மால் முன்னோர்கள் வைத்துவிட்டு போனதை காப்பாற்றக்கூட முடியவில்லை**

இந்தியாவின் நரேந்திர தேவ் வேளாண்மை மற்றும் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் தாவரவியல் பேராசிரியர்கள் குழு இந்தப் பாரிஜாத மரத்தை அண்மையில் ஆய்வு செய்து, பட்டுவரும் இந்த பாரி ஜாத மரத்தைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஆனால், இங்குள்ள மக்கள் இதற்குப் பெருந்தடையாக இருக்கிறார்கள். பேராசிர-யர்கள் மரத் தை ஏதாவது செய்து கொன்று விடுவார்களோ என்கின்ற அச்சம்தான் காரணம். சுமார் 1000 ஆண்டுகள் முதல் சுமார் 4000 ஆண்டுகள் வரை இதன் வயது இருக் கலாம் என்கிறார்கள். இந்த அரிய மரம் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று.

பாரத மக்கள் அனைவரும் தொன்றுதொட்டு இயற்கை வழிபாட் டில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதன் அடையாளம்தான் கோயில்களில் உள்ள மரங்கள். இந்திய மண்ணில்தான் மரங்கள் தெய்வமாக வழிபடப் படுகின்றன. ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு ஸ்தல விருட்ச மும், தீர்த்தமும் (குளம்) உண்டு. எந்த தட்பவெப்பத்தில், எத்தகைய மண்வளத்தில் கடல்மட்டத்திலிருந்து எந்த அளவுக்கு உயர்ந்த இடத்தில் என்னென்ன மரங்கள் வளரும் என்பதையும், அதன் மருத்துவக் குணங்களையும் தெரிந்துதான் கோயில்களில் ஸ்தல விருட்சங்களை வைத் துள்ளனர் நமது மூதாதையர். மா, பலா, புன்னை, மகிழம், மருதம், வன்னி, பன்னீர், பத்திரி, அரசு, வேம்பு என பல்வேறு மரங்களை ஸ்தல விருட்சமாக வைத்துப் பாதுகாத்து வந்தனர்.

கோயில்களில் பாதுகாக்கப்பட்ட ஸ்தல விருட்சங்கள் அந்த வகை மரங்களிலேயே மிகவும் தனித்துவமானவை. இந்த மாமரம் போனால் இன்னொரு மாமரம் என்பதைப் போன்றதல்ல. அதைத்தான் கிந்தூர் பாரிஜாத மரம் நமக்கு உணர்த்துகின்றது. அவை மிக அரிதான மரங்கள். ஆகை-யால்தான் இந்த மரங்களுக்கு அதீத மருத்துவக் குணங கள் இருந்தன.

தீர்த்தம் (குளம்) என்பதும், அந்தக் கோயில் அமைந்துள்ள மண்ணின் கனிமத் தன்மையால் குளத்து நீர் வேதியியல் மாற்றம் பெற்று மருத்துவக் குணம் பெறும் வகையிலேயே அமைக் கப்பட்டன. ஒவ்வொரு கோயில் குளத்துக்கும் ஒரு விசேஷம். ஆக வேதான், ஒவ்வொரு நோய்க்கும் ஒரு கோயில் குளத்தின் நீரைப் பரிந்துரைத்தார்கள்.

இன்று எல்லா கோயில்குளங்களும் வற்றிக் கிடக் கின்றன. திருநள்ளாறு, கும்பகோணம் மகாமகம் குளங்க ளில் விழாக் காலங்களில் லாரிகளில் நீரைக் கொண்டு வந்து நிரப்புகிறார்கள். பல்லாயிரம் பேர் குளிப்பதால், சுகாதாரம் கருதி குளோரினைக் கொட்டுகிறார்கள். இதனால் என்ன பலன் கிடைத்துவிடும்? ஆன்மிகப் பலனும் இல்லை. அறிவி யல் உண்மையும் இல்லை.

சமயத்துடன் இணைந்து இறைவழிபாட்டின் ஒரு பகுதி யாக மரங்களை ஸ்தல விருட்சங்களாக்கிய நமது மூதா-தயரின் தொலைநோக்குப் பார்வையை வியக்காமல் இருக்க முடியவில்லை. ஸ்தல விருட்சங்களுக்குப் புனிதத் தன்மை தரப்படுவதால் அந்த மரங்கள் பாதுகாக்கப்படும் என்பதும், கோயில் தோறும் குளம் அமைப்பதால் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படும் என்பதும் விஞ்ஞானம் வளராத காலத்து மூதாதையருக்கு இருந்தது. படித்துப் பட்டம் பெற்றதா-லேயே புத்திசாலிகளாகி விட்டதாகக் கருதும் நம்மால் அவர்கள் வைத்துவிட்டுப் போனதைக் காப்பாற்றக்கூட முடியவில்லை.

இருப்பதையும் இழந்துவிடாமல் இருக்க வழி காண வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham

# தின மகுடியின் கவிதைப் போட்டி

தலைப்பு– "தமிழனும் தமிழும்"
"நட்பு எதுவரை"
"தற்கால பெண்ணியம்"

இத்தலைப்பில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 20 வரிகளுக்குக் குறையாமல் எமக்கு எழுதி அனுப்பலாம்.

- எக்கவிதை வடிவமாயினும் சரி மரபுக்கவிதை-புதுக்கவிதை
- வயதுக் கட்டுப்பாடு இல்லை
- நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது
- கூப்பனோடு வரும் படைப்புக்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

Win Prizes!

**பரிசு விபரம்**

1 ஆம் பரிசு – 10,000 /=
2 ஆம் பரிசு – 5000 /=
3 ஆம் பரிசு – 3000 /=
ஆறுதல் பரிசுகள் இரண்டு. தலா –1000/=
பத்துப் பேருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

**தினமகுடியின் பரிசு மழை கூப்பன்**

பெயர் : ..................................
விலாசம் : ..................................
..................................
அ.அ.இல : ..................................
தொ.பேசி இல. : ..................................

## சுயதொழில் ஆர்வலர்களுக்கு சந்தர்ப்பம்

சுயதொழிலில் ஈடுபடவிரும்பும் பெண் ஆர்வலர்களுக்கு உதவி வழங்கும் வகையில் நவோதயம் இளைஞர் அமைப்பின் ஊடாக தினமகுடி வழங்கும் பரிசளிப்பு திட்டம் இம்முறை அறிமுகமாகின்றது.

தினமகுடி மாத இதழில் வெளிவரும் இந்தப் பரிசுக் கூப்பனை பூர்த்தி செய்து வெட்டி அனுப்புவதன் மூலமாக வாசகர்கள் இப்பரிசைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படும் அதிஷ்டசாலி ஒருவருக்கு தையல் இயந்திரம் ஒன்று பரிசாக வழங்கப்படவுள்ளது. ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம்.

**நவோதயம் வழங்கும் தினமகுடி பரிசு கூப்பன்**

பெயர் : ______________________
முகவரி : ______________________
______________________
அ.அட்டை இல. : ______________________
தொ.பேசி.எண் : ______________________
திகதி : ____________ கையொப்பம் : ____________

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கேள்வி: அடிக்கடி அர்த்தமின்றி சிரிப்பவர்கள் குறித்து?

பவானி–வவுனியா

பதில் : பழைது எண்ணம் மென்டல். எனது எண்ணம் ஆரோக்கியமானவர்கள்

கேள்வி: தினமகுடிச் சஞ்சிகையின் நோக்கம் என்ன?

சிவான–கிளிநொச்சி

பதில் : உலகெங்கிலுமுள்ள தமிழ் படைப்பாளிகளை ஓரணியில் இணைப்பது

கேள்வி: இலங்கையில் தமிழ் சஞ்சிகை வெளியீட்டு முயற்சிகள் தோல்வியை தழுவிவரும் நிலையில் உங்களுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை?

கபிலன்–வெள்ளவத்தை

பதில் : தோல்வியை கண்டு அஞ்சுபவன் தமிழன் அல்லன்

கேள்வி: தமிழீழ கொள்கையை கருணாநிதி இப்போ கையில் எடுத்திருப்பது ஏன்?

சாமினி–சேதவத்தை

பதில் : இறுதி யுத்தத்தின்போது கடமையைச் செய்ய தவறியமை, மூத்த தமிழறிஞர் என்ற கண்ணியத்தை நிலை நாட்ட மறந்தமை, தமிழின உணர்வாளர்களின் கட்டுப்பாட்டை சிதைத்தமை இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம்.

கேள்வி: பாம்பாட்டியாரே பதில்சொல்வதற்கு உமக்கு வேறு பெயரே கிடைக்கல்லயா?

மைதிலி–கொள்ளுப்பிட்டி

பதில் : மைதிலி.. தொழில்வழிப்பெயர்கள் நம்ம கலாசாரத்தில் உள்ளது என்கிறது உமக்குத் தெரியாதா?

கேள்வி: எனது மச்சான் என்னை மச்சி என்கி றான் அது சரியா பாம்பாட்டியாரே?

ரவீந்திரன்–வத்தளை

பதில் : மச்சி என்கிறது பெண்பால் சொல் ஆனா உமது மச்சான் மச்சி என உம்மை அழைக்கிறார் என்றால் கொஞ்சம் யோசிக்க தான் வேண்டும்

கேள்வி: கொழும்பிலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் இப்போ என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

பார்த்திபன்–தெஹிவளை

பதில் : பார்த்திபன் உங்களுக்குப் பத்திரிக்கை படிக்கும் பழக்கமில்லை என்கிறதை சொல்லவேயில்லையே.

கேள்வி: பாம்பாட்டியாரே எனது மனைவி என்னை ஜிம்முக்கு போங்க.. ஜிம்முக்கு போங்க என்கிறாள் ஏன்னு எனக்குப் புரியல்ல உமக்கு ஏதாச்சும் தெரிந்த சொல்லுமே

கருணா–மாங்குளம்

பதில் : நீர் வையாபுரியா உசிலைமணியா என்பதை தெரிந்தால் தான் சரியா பதில் தர முடியும் ஆனாலும் மனைவி சொல் மந்திரம் மறந்திட வேண்டாம் கருணா.

கேள்வி: உம்மை செல்லமே என அழைக்கலாம் என நினைக்கிறேன்.. எப்படி வசதி?

வசந்தி–பம்பலப்பிட்டி

பதில் : செல்லம் என்றால் செல்வம் என்று அர்த்தம். இந்தச் செல்வங்கள் பலவகைப்படும் இதில எதை நினைச்சு வசதி பத்தி கேட்கிறீர்?

கேள்வி: பாம்பாட்டியாரே.. நடிகை நமிதா கனவில வாறமாதிரி உமது மகுடியில் ஒரு ரியூன் தரமுடியுமா?

தினேஷ்–கொச்சிக்கடை

பதில் : சிறந்த கேள்விக்குப் பரிசு என அறிவித்திருந்த போதும் இப்படி ஒரு கேள்வியை கேட்டிருப்பது சிந்திக்க வைக்கிறது. ஆமா room போட்டு ஏதும் யோசிக்கல்லையே.

**சிறந்த கேள்விக்கான 500 ரூபா பணப் பரிசை பெறுபவர்**


**சாமினி–சேதவத்தை**

LANKA LETHER
PRODUCTS (PVT) LTD
No. 196, 208, Sea Street,
Colombo-11.
Sri Lanka.
Tel: +94 11 2433762
Fax: +94 11 2452228
Mobile: 0777 386392
E-mail: leatherp@sltnet.lk

# இது ஏன் எப்படி நடந்தது?

அஷ்லி

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் மௌனித்து - முற்றுப் பெற்ற மூன்றாவது வருடத்தின் முக்கியமான மாதத்திற்குள் நாம் நின்று கொண்டிருக்கிறோம். ஆம் 2009 மே 18 ஆம் திகதி தமிழர்களின் ஆயுதப்போராட்டம் முற்றுப்பெற்ற நாளாகப் பெரும்பான்மை மக்களால் வருடாந்தம் நினைவூட்டப்படுகிறது.



இந்தப் போராட்டத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் இதில் பங்கேற்றவர்கள், துணைபுரிந்தவர்கள், ஒத்தாசை நல்கியவர்கள், நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் என பல தரப்பினரும் சொல்லெண்ணத் துயரங்களை சந்தித்துள்ளனர். குறிப்பாக வன்னிவாழ் மக்கள் இந்த அவலத்தின் உச்சத்தை அனுபவித்தனர்.

1953, 1977, 1983 போன்ற கால கட்டங்களில் இன வன்முறைகள் காரணமாகத் தமிழர்கள் சந்தித்த இழப்புகள்-கொடுமைகளை விட இதன்பின்னர் வந்த கால கட்டங்களில் அவர்கள் சந்தித்த அவலங்களும் இழப்புகளும் சொல்லில் அடங்காதவை..

தாம் வாழ்ந்த சொந்த மண்ணிலேயே இவர்கள் இந்தப் பாதிப்புகளையும் பேரிழப்புகளையும் சந்தித்துள்ளனர். ஏனைய பகுதிகளைவிட இறுதி யுத்தம் நடந்த வன்னியில் வாழ்ந்த மக்களே இத்தகைய துயரங்களின் உச்சத்தை தொட்டவர்கள் என்பது வரலாற்றுப் பதிவாகும்.

2009 மே 18 ற்குப் பிறகு தமிழன் தமிழனாக இல்லை. உயிர் கொடுத்தவர்களும், அநியாயமாக உயிர் பறிக்கப் பட்டவர்களும் போய்ச் சேர்ந்துவிட, அவரவர் உயிரே அவரவர்க்கு சுமையாகிவிட்ட தான ஒரு கொடுந்துயரம்..

தமிழன் என்றால், தலை நிமிர்வு, என்பதாய் அர்த்தப்படுத்தி வாழ்ந்தோமே இன்று உலகமே நம்மைப் கைகொட்டிச் சிரிக்கிறதே.. இது ஏன் நடந்தது..? எப்படி நடந்தது.. ? கனவில்கூட நினைத்துப் பார்த்திராத இந்த அவலத்திற்கு யார் அல்லது எது காரணம்? இதுபோன்ற விடை தெரியாக் கேள்விகளோடு ஒரு வெறுமையான வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கின்றனர் இந்த மண்ணின் மைந்தர்கள்.

இன்று அவர்களது தியாக வாழ்வுக்கு ஆறுதல் தருவார் எவருமில்லை. தம்மை தாமே காத்து, தம்மை தாமே வளர்த்துகொள்ள வேண்டிய சூழ் நிலைக்கு இவர்கள் வாழப் பழக்கப்பட்டுவிட்டனர். ஆண்டாண்டு காலமாக கட்டிகாத்த தமது உடைமைகளை இழந்து, உறவாடி மகிழ்ந்த உறவுகளைப் பிரிந்து,உரிமை கொண்டாடி கழித்த நிலங்களை துறந்து அவலத்தின் வெறுமைக்குள் அவர்கள் வாழ்வை கழிக்கவேண்டிய நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந்த மக்களின் துயரங்கள் துடைக்கப்படவேண்டும் இவர்களது வாழ்வாதாரம் உரிய முறையில் கட்டியெழுப் பப்படவேண்டும். யுத்தம் ஓய்ந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள போதும் இவர்களுக்கான உதவி, ஒத்துழைப்புகள் திருப்தி தருவனவாக அமைந்துவிடவில்லை எனவே உலகெங்கும் வாழும் உறவுகள் கவனம்கொள்ள வேண்டும். துயர்துடைக்கும் கரங்கள் நீளவேண்டும்.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நோர்வே திரைப்பட விழா விருதுகள்



தமிழ் படங்களுக்கு என்று உலக-ளவில் நடத்தப்படும் ஒரே திருவிழாவான நோர்வே திரைப்பட விழா கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நோர்வேயின் ஒஸ்லோ நகரில் நடந்து வந்தது.

விழாவில் 10 படங்களும், 20 குறும்படங்களும் தெரிவாகி லொரன்ஸ்கூவில் உள்ள திரையரங்கில் திரையிடப்பட்டது. இதில் 20 குறும்படங்களில் 5 குறும்படங்களுக்கு விருதுகள் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் விழாவின் இறுதிநாளில் பெரிய படங்களுக்கு விருதுகளும். வண்ணமயமான கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

ரசிகர்களின் பலத்த கைத்தட்டல்களுக்கு இடையில், தமிழ் சினிமாவுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டன. இதில் சிறந்த நடிகருக்கான விருது அவன் இவன் படத்தில் நடித்த விஷாலுக்கும், போராளி படத்தில் நடித்த சசிகுமா ருக்கும் கிடைத்தது. சிறந்த நடிகைக்கான விருது மயக்கம் என்ன படத்திற்காக ரிச்சா கங் கோபாத்யா யேக்கு கிடைத்தது. மேலும் வாகை சூட வா படத் திற்கு 7 பிரிவுகளில் விருது கிடைத்தது.



## தமிழ் படங்களுக்கான விருது விபரங்கள்

சிறந்த படம் - வாகை சூட வா

சிறந்த இயக்குநர் - சற்குணம் (வாகை சூட வா

சிறந்த திரைக்கதை - சுசீந்திரன் (அழகர்சாமியின் குதிரை)

சிறந்த இசை - இளையராஜா

சிறந்த துணை நடிகர் (அப்புக்குட்டிஅழகர்சாமியின் குதிரை)

சிறந்த தயாரிப்பு நிறுவனம் - எஸ்கேப் ஆர்டிஸ்ட் மோஷன் பிக்சர்ஸ்

சிறந்த கதை - புகழேந்தி தங்கராஜ் (உச்சிதனை முகர்ந்தால் - )

சிறந்த பாடல் - காசி ஆனந்தன் (உச்சிதனை முகர்ந்தால் )

சிறந்த நடிகர் - விஷால் (அவன் இவன்),
சசிகுமார் (போராளி).

சிறந்த நடிகை - ரிச்சா கங்கோபாத்யாயே
(மயக்கம் என்ன)

சிறந்த துணை நடிகை - தேவதர்ஷினி
(மகான் கணக்கு).

சிறந்த ஒளிப்பதிவு - ரிச்சர்ட் எம் நாதன்(கோ).

சிறந்த வில்லன் - சம்பத்(வர்ணம் மற்றும் ஆரண்ய காண்டம்).

சிறந்த காமெடி - கஞ்சா கருப்பு(போராளி), சூரி(போராளி).

சிறந்த பின்னணி பாடகர் - சத்யா(எங்கேயும் எப்போதும்).

பின்னணி பாடகி சின்மயி (வாகை சூட வா ),

சிறந்த எடிட்டிங் - கோலா பாஸ்கர்(மயக்கம் என்ன).

சிறந்த நடனம் - பாபி(போறானே... - வாகை சூட வா).

சிறந்த ஸ்டன்ட் மாஸ்டர் - பீட்டர் ஹெய்ன்(கோ).

சிறந்த ஸ்டன்ட் நடிகர் - கணேஷ் பாபு(மகான் கணக்கு).

சிறந்த எடிட்டிங் - கோலா பாஸ்கர்(மயக்கம் என்ன).

சிறந்த கலை இயக்குநர் - சீனு(வாகை சூட வா).

சிறந்த பின்னணிக் குரல் - தீபா வெங்கட்(மயக்கம் என்ன).

சிறந்த புதுமுகம் - நீனிகா(உச்சிதனை முகர்ந்தால்).

சிறந்த மேக் அப் - கேபி சசிகுமார்(வாகை சூட வா).

சிறந்த உடை அலங்காரம் - நட்ராஜ்(வாகை சூட வா).

சிறப்பு விருதுகள் - வெங்காயம், நர்த்தகி, பாலை, வர்ணம் போன்ற படங்களுக்கு சிறந்த சமூக விழிப்புணர்வு படங்களுக்கான சிறப்பு விருதுகள் அளிக்கப்பட்டன.

மேலும் தமிழ் பண்பாட்டை முன்னிறுத்தும் படத்துக்கான சிறப்பு விருது கவுரவ் இயக்கிய தூங்கா நகரம் படத்துக்கு வழங்கப்பட்டது.

விழாவின் இறுதிநாளில் பின்னணி பாடகர்கள் சாருலதா மணி, ஸ்ரீமதுமிதா, பிரபா பாலகிருஷ்ணன் உள்ளிட்டவர்களின் இன்னிசை கச்சேரியும் நடந்தது.


இந்த விழாவில் இயக்குனர் சற்குணம், கவுரவ், நடிகை ரிச்சா,, இசையமைப்பாளர் சுந்தர்.சி.பாபு, ஆவணப்பட டைரக்டர் சுபாஷ் கலியன், புன்னகைப்பூ கீதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# விஷாலுடன் பகிர்ந்து கொள்கிறார் சசிகுமார்





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






# கெயிலின் குத்து

## ஜோடி சேர்ந்தார் ஹரிப்பிரியா



கிரிக்கெட் வீரருடன் ஹரி ப்ரியா குத்தாட்டம் போட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. கிரிக்கெட் வீரர்களுடன் கோலிவுட் ஹீரோயின்கள் அடிக்கடி கிசுகிசுவில் சிக்குகின்றனர். சமீபத்தில் டோனியுடன் இணைத்து கிசுகிசுக்கப்பட்டார் லட்சுமிராய். இதுபோல் பல்வேறு பொலிவுட் நடிகைகளும் இப்பிரச்சினையில் சிக்கி உள்ளனர். புதிதாக இந்த பட்டியலில் இடம் பிடித்திருக்கிறார் 'முரண்' பட ஹீரோயின் ஹரி ப்ரியா. இவர் கன்னடத்தில் 'கில்லாடி கிட்டி' என்ற படத்தில் நடித்து வருகிறார். இதன் பாடல் கசட் வெளியீட்டுவிழா சமீபத்தில் பெங்களூரில் நடந்தது. இந்த விழாவுக்கு ஐ.பி.ல் கிரிக்கெட் போட்டியில் விளையாடி வரும் வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வீரர் கிரிஸ் கெய்ல் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார்.

விழாவில் பங்கேற்ற கிரிஸ் அங்குள்ளவர்களிடம் சகஜமாக பேசினார். அவரிடம் ஹரி ப்ரியாவை அறிமுகப்படுத்தினார்கள். அவருக்கு கைகுலுக்கி வாழ்த்து கூறினார். பட கசட் வெளியானது. பாடல் ஒலிபரப்பப்பட்டது. அப்போது கெய்ல் ஆர்வமிகுதியால் குத்தாட்டம் போட்டார். அவரை பார்த்து உற்சாகம் அடைந்த ஹரி ப்ரியா தானும் அவருடன் இணைந்து குத்தாட்டம் போட ஆரம்பித்தார். இதை அங்கிருந்தவர்கள் கைதட்டி ரசித்தனர். இதுபற்றி ஹரி ப்ரியா கூறும்போது

"கெய்ல் என்னை பார்த்ததும் கைகுலுக்கி வாழ்த்து சொன்னார். உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. நீங்கள் மிகவும் அழகாக இருக்கிறீர்கள் என்று பாராட்டினார்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Why This கொலைவெறி

மெக்சிகோ நாட்டைச் சேர்ந்தவர் மார்ட்டின் மான்ரிக் (வயது 40). கடந்த வருடம் ஜுன் மாதம் இந்தியா வந்த இவர், ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே ஒரு பல்கலைக்கழகத்தில் தங்கியிருந்து கணிதத்துறையில் ஆராய்ச்சி செய்து வருகிறார்.

இவரது 2ஆவது மனைவி டினேசியா (வயது 35) இவர் கேரள மாநிலம் திருச்சூரில் உள்ள கலா மண்டலம் பல்கலைக்கழகத்தில் நடனம் கற்று வருகிறார்.

இவர்களது மகள் அடிலா (வயது 5) தந்தையுடன் தங்கி அருகிலுள்ள பள்ளியொன்றில் 2ஆம் வகுப்பு படித்து வருகிறாள்.

இந்நிலையில் டினேசியா அடிக்கடி வந்து மகளை பார்த்துச் செல்வார். கடந்த 4ஆம் திகதி (ஏப்ரல்) தனது மகளை பார்க்க வந்த டினேசியா 9ஆம் திகதி திருச்சூர் புறப்பட்டார்.ஆனால் குறித்த நேரத்தில் திருச்சூர் போய்ச் சேரவில்லை என மான்ரிக், பொலிஸாரிடம் மனைவி குறித்து முறைப்பாடு செய்தார்..

இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த பொலிஸார், டினேசியாவை தேடிவந்தனர். இந்நிலையில் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் அருகே ஆஸ்டின்பட்டி அரசு வைத்திய சாலை பகுதியில் ஒரு கால்வாயில் சூட்கேசுக்குள் எரிந்த நிலையில் இளம்பெணின் பிணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அதாவது டினேசியா மாயமானதாக முறைப்-பாடு கொடுக்கப்பட்ட 2ஆவது நாளில் (11ஆம் திகதி) காலையில் இந்த பெண் பிணம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பொலிஸார் டினேசியாவின் கணவர் மார்ட்டின் மான்ரிக்கிடம் விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில் டினேசியாவை மார்டடின் மான்ரிக்கே அடித்து கொலை செய்து பின்னர் உடலை எரித்து சூட்கேசுக்குள் வைத்து கால்வாயில் வீசியது தெரியவந்தது.

அதாவது, டினேசியாவின் குழந்தை மான்ரிக் பராமரிப்பிலேயே இருந்து வந்ததால் அந்த குழந்தை டினேசியாவுடன் நன்றாக பழக மறுத்தது. எனவே தனது குழந்தையை தன்னுடன் அனுப்பி வைக்கும்படி டினேசியா வற்புறுத்தி இருக்கிறார்.

அதற்கு மான்ரிக் மறுத்துள்ளார். இதில் ஏறபட்ட தகராறில் டினேசியாவை அடித்து கொலை செய்து அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக உடலையும் சூட்கேசுக்குள் வைத்து தீ வைத்து எரித்து கால்வாயில் வீசியது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து மார்ட்டின் மான்ரிக்கை பொலிஸார் கைது செய்து திருப்பரகுன்றம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரணை நடத்தினர்

மான்ரிக் ஒருவர் மட்டுமே இந்த கொலையை செய்தாரா? அல்லது வேறு யாரேனும் உடந்தையாக இருந்தார்களா? என்பது குறித்தும் விசாரணை நடந்து வருகிறது.

கால்வாய்ப் பகுதியில் காரின் உதிரி பாகம் தான் இந்த கொலையில் துப்பு துலக்க பொலிஸாருக்கு உதவியாக இருந்து உள்ளது.

பிணத்தை காரில் ஏற்றி வைத்து கொண்டு ஊர் ஊராகச் சுற்றி கடைசியில் ஆள் நடமாட்டம் இல்லாத இடமான ஆஸ்டின்பட்டி பகுதியில் வீசிவிட்டு செனறுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.








# இல்லறத்துக்குள்

காதலிக்கத் துடிக்கும் ஒரு காதல் தேவதைக்கும் காதல் வந்ததுதான் இயற்கையின் இயல்பான முரண். காதல் வானில் பட்டாம்பூச்சிகள் சிறகடிக்க, சிந்தையில் இசை ஞானியின் சிம்பனி ஒலிக்க, பிரசன்னாவுக்கு மட்டுமே..

29 ஆம் பார்க்க...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புத்தம் புதிய டிசைன்களில் நவநாகரிக ஆடைகளுக்கு
NAIDU MAHAAL
www.naidumahaal.lk
SPECIALIST IN
Wedding &
Home Comeing Saree,
Shalwar,
Gents & Kidswear
No. 52, W.A. Silva Mawatha, Colombo-06
Tel: 011 2588664, Email: naidumahaal@yahoo.com



தங்கையா மருதமுத்து
பதுளை

# காலத்தின் கட்டாயம்

காலத்தின் கட்டாயம்
கலைந்தன கூடுகள்
உயிர் காக்க பறந்த நாம்
உலகுக்கு அகதிகள்

நல்லறம் காத்து
இல்லறம் கைக்கோர்த்து
கல்லறை அவன் செல்ல
தனித்தவள் நான்
தரணியில் விதவையாம்

இறைவன் தீர்ப்பளித்தான்
ஆழிக்குள் எம் உறவுகள்
காவு கொடுத்தோர் நாம்
கலியுக அநாதைகள்

அகதி விதவை அநாதை
அந்தஸ்து கொடுக்கும் மானிடனே
இருண்ட உலகில் புரண்டு வந்தவனே
ஈன்ற தாயின் தொப்புள் கொடியன்று
நீர் கொண்ட உறவு எது-இவ் உலகில்

சஞ்சரித்த போது
விழித்தெழு தோழனே
கிழித்தெறி மடமையை
உறவுகளை உயர்த்திட
உதிரத்தை பங்கிடு

அன்புக்கு உயிர் கொடு
தாழ்வு மனம் கலைத்திடு
அனைவரையும் அனைத்திடு -ஒரு
பொற்காலம் படைப்போம் புறப்படு

25ஆம் பக்கத் தொடர்ச்சி...

திறந்த தன் மனதின் டைரியை நமக்காக முதல் முறையாகத் திறந்தார் சினேகா.

அந்தக் காதல் பக்கங்களிலிருந்து... "பூ பூத்ததை யார் பார்த்தது... காதல் கூட பூவைப் போன்றது...ன்னு ஒரு பாடல் இருக்கு. அதுதான் எங்க காதல்லேயும் நிகழ்ந்தது. அப்படியே பார்வையில ஆரம்பிச்சு, நட்பாகப் பூத்து, பேசப் பேச இன்னும் எதையுமே பேச ஆரம்பிக்கலையேன்னு நிறுத்த முடியாத நிலை வந்தது. அருகில் இல்லாதபோது வச்சதைத் தொலைத்துத் தேடற மனப்பான்மை வருமே... அப்பதான் அந்த ரசாயனம் வேறா புரியும்.

அப்படித்தான் இயல்பா பிரசன் கூடப் பழக ஆரம்பிச்சேன். ரெண்டு வருஷம் பழகிய சொந்தத்துல, குடும்ப நண்பர்களாவே ஆனோம். 'வாடா... போடா...'ன்னு ஒரு ஆண் கிட்ட பேசறது மரியாதை இல்லாத செயல்ங்கிற எண்ணம் மாறி, அது அந்நியோன்யத்துக்கான அடையாளமா தோணிச்சு. இதைத்தான் பேசணும்ங்கிற நாகரிகம் மாறி, எதையும் பேசலாம்னு ஒரு நம்பிக்கை வந்தது. அவுட்டோர் போனப்ப எதையோ விட்டுட்டு வந்த எண்ணம் ஏற்பட்டப்பதான், இது நட்பு மட்டும் இல்லைன்னு புரிஞ்சது. பிரசன் என்கூட பழக ஆரம்பிச்ச நாட்கள்ல முதல்முதலா ஒரு பொக்கே கொடுத்தார். சிவப்பு ரோஜாக்களா சிரிச்சுக்கிட்டிருந்த பொக்கே வாடிப்போகிற வரை என் ரூம்லயே இருந்தது. அதை அகற்ற நேர்ந்தப்ப, அதுல இருந்து ஒரே ஒரு பூவை மட்டும் எடுத்து என் பர்சனல் அலமாரியில வச்சுக்கிட்டேன். எத்தனையோ பொக்கே, எவ்வளவோ பூக்களைக் கடந்து வந்திருந்தும் இந்த சிவப்பு ரோஜாவுக்கு மட்டும் ஏன் இந்த அங்கீகாரம் தந்தேன்ங்கிறது பழக ஆரம்பிச்சு பல பொழுதுகள் கழிச்சுதான் புரிந்தது. ஒரு முறை அலமாரியை அம்மாகூட சேர்ந்து சுத்தம் செய்தப்ப அந்த சிவப்பு ரோஜாவை எடுத்து பத்திரப்படுத்தினேன்.

'அது என்ன ஸ்பெஷல் ரோஜாவா..?ன்னு அம்மா கேட்டாங்க. அம்மாக்களின் கண்களுக்கு எதுவும் தப்பறதில்லை. 'அது பிரசன் தந்தது...'ன்னு பதில் சொன்னேன். பிரசன்னோட நேர்மை எனக்குப் பிடிக்கும். உண்மையை உடைச்சுப் பேசற சுபாவம் பிடிக்கும். அது ஹீரோவோ, வில்லனோ, சில சீன்கள்ல மட்டும் வர வேண்டிய 'பாணா' மாதிரிப் படமோ... நேர்மையா ஏத்துக்கிட்டு தன் தனித்தன்மையைக் காட்டற நம்பிக்கை பிடிக்கும். இப்படியே 'பிடிக்கும்'ங் கிற விஷயங் களை மட்டும் பட்டியல் போடாம, 'பிடிக்காது'ங் கிற விஷயங்கள் பற்றியும் பேசினோம். என் மைனஸ் என்னன்னு பிரசனுக்கு நல்லாத் தெரியும். என் கோபம் தெரியும். அதைத் தீர்க்கிற வழியும் அவருக்குத் தெரியும். நெருக்கடியில பிரசன்கிட்ட ஒரு அழுத்தம் தெரியும். பாஸிட்டிவா பேசினா அதிலேர்ந்து உடனே மீண்டுவந்துடுவார்னு எனக்குத் தெரியும்.



அதேபோல அவர் 'நடை' சரியா இல்லைன்னு உணர்ந்தேன். உடைகள், ஹேர்ஸ்டைல் பற்றியும் அவர் கவலைப்படலைன்னு தோணிச்சு. சொன்னேன். 'எனக்கு எல்லாம் தெரியும்'னு விலகி நிக்காம, அத்தனையையும் மாத்திக்கிட்டார். அந்தப் பெருந்தன்மை இன்னும் பிடிச்சிருந்தது.

ஒரு சின்ன 'இயர் ரிங்' போட்டா அவர் முகத்துக்கு அழகா இருக்கும்னு ஒருசமயம் தோணிச்சு. உடனே என்கிட்ட இருந்த வெள்ளி இயர் ரிங்கை போட்டுவிட்டேன். ஆனா அது தங்கமா இருந்திருக்கணும்னு தோண, பிரசன்னோட கடந்த பர்த்டேக்கு 'கோல்ட் இயர் ரிங்' பிரசன்ட் பண்ணினேன். அவர் காதுல என் காதல் பரிசு டாலடிக்கிறதை இப்பவும் நீங்க பார்க்கலாம்.

நூற்றுக்கணக்கான பரிசுப் பரிமாற்றங்கள்ல அந்த சிவப்பு ரோஜாவும், இந்த கோல்ட் இயர் ரிங்கும் சம்திங் ஸ்பெஷல். இப்படி தனது காதல் ஆரம்பத்தை பகிர்நது கொண்டார் இல்வாழ்க்கைக்குள் மே11ஆம் திகதி இணைந்து கொண்ட சினோக!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கின்னஸ் சாதனை படைத்த திருமண அல்பம்

திருமண ஒப்பந்த நிறுவனமான பாரத் மேட்ரி மோனியல் சார்பில் திருமண ஆல்பம் ஒன்று தயாரிக்கப்பட்டு கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேட்ரி மோனியல் நிறுவனரும் தலைமை செயல்இயக்குனருமான ஜானகிராம் கூறியதாவது, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 14ஆம் திகதி மேட்ரி மோனியல் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு வித்தியாசமாக கொண்டாடப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதற்காக 15 பேர் கொண்ட குழுவினர் சுமார் ஆயிரத்து 600 மணி நேரம் செலவழித்து இரண்டு வார கால உழைப்பில் இந்த அல்பத்தை உருவாக்கினர் என்றார்.

# அறிவோம் நம்மை சுற்றி

- முதலில் விண்வெளிக்கு சென்ற விலங்கு -நாய்
- நீண்ட ஆயுளை உடைய விலங்கு -ஆமை.
- உணவை கழுவி சாப்பிடும் விலங்கு -ரக்கூன்.
- மிகப் பெரிய நீர்ப்பறவை - அன்னம்.
- பறவைகளில் அதிக சிறகை கொண்டது -அன்னம்
- பறவைகளில் அதிக நாள் வாழும் பறவை -கிளி.
- நீர் அருந்தாத உயிரினம் -பல்லி.
- சிவப்பு நிறத்தில் வியர்வையை வெளியேற்றுவது -நீர் யானை
- பட்டாம் பூச்சியின் சரணாலயம் -மெக்சிக்கோ
- மூக்கில் பல் உள்ள விலங்கு -முதலை
- கொம்பில் கண் உள்ள ஊர்வன -நத்தை
- பூனை 3மாதங்களில் குட்டி போடும்
- பசு பத்து மாதங்களில் குட்டி போடும்
- பூரானுக்கு 100 கால்கல் உண்டு
- ஈக்கள் மணிக்கு 7கி.மி வேகத்தில் பறக்கும்.

ஆக்கம்: வை.[illegible] மன்னார்.

# பில்லா 2 இல் உலக அழகி



முன்னாள் இந்திய அழகியும் உலக அழகிப் போட்டியில் இரண்டாவது இடம் பிடித்தவருமான ஓமன குட்டன் இப்போது அஜீத்துடன் ஜோடியாக பில்லா-2இல் நடித்துக்கொண்டிருக்கிறார்.

இன்னும் ஒரு படம் கூட முழுசாக நடித்து முடிக்கவும் இல்லை வெளிவரவும் இல்லை அதற்குள் முன் ஜாக்கிரதையாக நிறைய கண்டிஷன்களை அவிழ்த்து விட்டிருக்கிறார் இந்த மலையாள இந்திய அழகி.

மோசமான கவர்ச்சியோ அல்லது அந்தமாதிரி விசயங்களுக்கோ நான் ஒத்துழைப்பேன் என்று தவறான என்னத்துடன் யாரும் என்னிடம் நெருங்காதீர்கள் என்று எச்சரிக்கை மணி அடித்துள்ளார் நடிகை ஓமனக் குட்டன்.

உலக அழகிப் போட்டி வரை சென்று இரண்டாவதாக வந்த ஓமனக்குட்டன் ஷக்ரி டோலட்டி இயக்கத்தில் அஜித்துக்கு ஜோடியாக பில்லா-2 படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

'பில்லா-2' ஷூட்டிங்கில் பார்வதி ஓமனகுட்டன் கூறியிருப்பதாவது,

"முதல் படத்திலேயே அஜீத் ஜோடியாக நடித்தது மிகப்பெரிய பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். கடவுளுக்கு நன்றி சொல்கிறேன். என் முதல் படமே பெரிய திருப்புமுனையாக எனக்கு அமையும் என்று நம்புகிறேன்.

அஜீத்தை சந்திப்பதற்கு முன்பு அவர் ஒரு பந்தா பார்ட்டியாக இருப்பார் என்று நினைத்தேன். பழகிய பிறகு தான் தெரிந்தது, அவர் எவ்வளவு எளிமையானவர் என்று. அவர் ஒரு உதாரணமான மனிதர். நான், அவருடைய மனைவி ஷாலினியின் தீவிர ரசிகை. இதை அவரிடம் சொன்னபோது, அவரும் ஷாலினியின் ரசிகராக இருந்தவர் என்று தெரியவந்தது. அவர் ரசித்த பெண்ணே வாழ்க்கை துணையாக வந்ததற்காக, நான் அவருக்கு வாழ்த்து சொன்னேன்.

'பில்லா-2' படத்தின் கதையை என்னிடம் கேட்காதீர்கள். அதைச் சொன்னால், சுவாரஸ்யம் போய்விடும். அஜீத்துக்கு ஜோடியாக, படத்தின் கதையை திசை திருப்பும் கதாபாத்திரத்தில் நான் நடிக்கிறேன். இந்த படம் ரசிகர்களை பெரிய அளவில் ஈர்க்கும் என்று மட்டும் என்னால் உறுதியாக சொல்ல முடியும்.

பார்வதி ஓமனகுட்டன் உலக அழகி என்பதால் தாராளமாக கவர்ச்சி காட்டுவார் என்ற தவறான எண்ணத்துடன் யாரும் என்னை அணுக வேண்டாம். நான் நடிக்கிற வேடத்துக்கு எந்த அளவுக்கு கவர்ச்சியும் நெருக்கமும் தேவைப்படுகிறதோ, அதை நான் தயங்காமல் செய்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழுகிறான் வஞ்சத்தில் வீழ்ந்த மாவீரன்

தமிழருக்கு கிடைக்காமல் கிடைத்த மாணிக்கம் சிவாஜி.தொடர்ச்சியாக ஒரு வாரத்துக்கு சிவாஜியின் படங்களைத் திரும்பத் திரும்ப பார்த்தேன். பாசமலரின் இறுதிக்காட்சியில் அவரது நடிப்பு (பிணமாக) உலகத்தரம் வாய்ந்தது என்று உணர முடிந்தது.

அறிஞர்அண்ணா ஒருமுறை சொல்லியிருந்தார். மார்லன் பிராண்டோவை விட சிறந்த நடிகன் நமது சிவாஜி என்று இது நூற்றுக்கு லட்சம் சதம் உண்மை.

இன்று கமலுக்கு, விக்ரமுக்கு, அமிதாப்புக்கு, ஷாருக்குக்கு, சல்மானுக்கு என்று சமகாலத்தின் சிறந்தநடிகர்களுக்கெல்லாம் ஏற்றுக் கொள்ளும் பாத்திரத்தை சிறப்பிக்க போதுமான முன்னுதாரணங்கள் இருக்கின்றன. ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முன்னால் சிவாஜிக்கு அத்தகைய வசதியில்லை.

அவர் சிறப்பாக நடித்த படங்கள் எல்லாம் முழுக்க முழுக்க அவரது தனித்துவ படைப்பாற்றலால் உருவானவை. சிவாஜியின் நடிப்பு மிகைத்தன்மை வாய்ந்தது என்று முன்பொரு காலத்தில் மூச்சுப்பிடிக்க வாதிட்டிருக்கிறேன். மைக் இல்லாத அந்தக் காலத்து நாடகங்களிலிருந்து வந்தவர்களின் இயல்பு அது என்பதை இப்போது புரிந்துக்கொள்ள முடிகிறது.

சத்தமாகதான் பேசுவார்கள். உடல்மொழி அசாதாரமாணதாக இருக்கும். அதே சிவாஜி பிற்பாடு தேவர் மகனில் கமலைவிட யதார்த்தமாக நடித்து அசத்தியிருக்கிறார்.

முன்னுரையே கொஞ்சம் நீளமாகிவிட்டது. சிவாஜியைப் பற்றி எழுதுவதென்றால் கொஞ்சம் மிகையாக இப்படி நீட்டி முழக்குவது இயல்பாக வந்துவிடுகிறது. கடந்த வார இறுதியில் கர்ணன் பார்க்கப்போனோம். வாசலில் பேனர், தோரணம், போஸ்டர் என்று இளைய அல்டிமேட் புரட்சி-சின்ன-லொட்டு-லொசுக்குகளுக்கு எல்லாம் சவால் விடும் வகையில் சிவாஜி ரசிகர்கள் களமிறங்கியிருந்தார்கள். 1964ல் வெளியாகி, கிட்டத்தட்ட தமிழகமே நான்கைந்து முறை பார்த்துவிட்ட ஒரு படத்துக்கு 2012ல் இப்படிப்பட்ட வரவேற்பு என்பது ஆச்சரியகரமானதுதான்.

முழுக்க முழுக்க ஃபேமிலிஆடியன்ஸ். தொண்ணூறு சதவிகிதம் அரங்கு நிறைந்தது. உலகின் முதல் டெஸ்ட் ட்யூப் பேபியான கர் ணனை, அவனது தாய் குந்திதேவி ஒரு பேழையில் வைத்து ஆற்றில் விட்டு விடுகிறாள். தேரோட்டி ஒருவர் அக்குழந்தையை கண்டெடுத்து வாரிச் செல்ல, வழியில் ஒரு சாமியார் ஏது இக்குழந்தை என்று விசாரிக்கிறார். குழந்தையை அந்த சாமி யாரிடம் தேரோட்டி கொடுக்க, குழந்தை சிரித்தபடியே தன் கையில் இருக்கும் ஒரு முத்து மாலையை சாமி யாருக்கு 'தானம்'செய்கிறது. தியேட்டரில் விசில் சத்தம்.

மகாபாரதத்தின் ஒரு போர்ஷனை மட்டும் எடுத்துக் கொண்டு மிகத்திறமையாக திரைக்கதையாக்கம் செய்திருக்கிறார்கள். சக்தி கிருஷ்ணசாமியின் பஞ்ச் டயலாக்ஸ் மாஸ் சினிமாவின் உச்சம்.


ஹீரோவான கர்ணன் மட்டுமின்றி, வில்லன், ஹீரோயின், துண்டு துக்கடா பாத்திரங்கள், சிறப்பாக இருக்கின்றன. இவர்களும் ஆளாளுக்கு ஆள் 'பஞ்ச்' ஆக பேசித்திரிய, படம் பார்க்கும் கிழவிகள் கூட விசிலடித்து, விசிலடித்தே வாய் வீங்கிப் போகிறார்கள். குறிப்பாக சாவித்திரியும், சிவாஜியும் விளையாடிக் கொண்டிருக்கும் (தாயக்கட்டை தான்) போது ஒரு எசகுபிசகான கட்டத்தில், சாவித்திரியின் கணவரான துரியாதனன் (அசோகன்) வந்துவிட..

இருவரும் திருட்டு முழி முழிக்க, நியாயமாக ஒரு கணவனுக்கு வரவேண்டிய கோபமோ, சந்தேகமோ இல்லாமல் "எடுக்கவா, கோர்க்கவா" என்று அசோகன் அடிக்கும் பஞ்ச் அதகளம். சுமுகமான கதையோட்டத்துடன் ஒடிக் கொண்டிருந்த படத்தில் - கல்மனதையும் கரையவைக்கும் இறுதிக்காட்சியில் உலகில் தோன்றிய ஒவ்வொரு மாவீரனின் முடிவையும் கண்முன் கொண்டு வந்து காட்டுகிறார் இயக்குனர் பந்துலு.

அதிலும் வீரமாகப் போரிடும் குழந்தைப் போராளியான கர்ணனின் மகனை அயோக்கியத்தனமாக கண்ணன்-அர்ஜுனன் கூட்டணி இரக்கமின்றி சாகடிப்பதும், போர் யோக்கியதையை மீறி நேருக்கு நேராக மோத திராணியின்றி தேர்க்காலை தூக்கி நிறுத்த தலைப்பட்ட நேரத்தில் கர்ணனின் நெஞ்சிலே அம்புகளை இதே கூட்டணி எய்வதும் சமீபக்கால வரலாற்றினை நெஞ்சிலே நிழலாடச் செய்கிறது.

ராமன், கண்ணன் என்று காலம் காலமாக ஹீரோயிஸமாக கட்டமைக்கப்படும் இத்தேசத்தில் இராவணன், கர்ணன் மாதிரி நேர்மையான புரட்சி வீரர்களின் தனித்துவப் புகழ் மெச்சி சொல்லப்படு வதை வரவேற்றாக வேண்டும் என்கிற அடிப்படையில், நாற்பத்தி எட்டு ஆண்டுகள் கழித்து மீண்டு வந்திருக்கும் கர்ணனை பெரிய தாம்பாளத் தட்டில் ஆரத்தியெடுத்து வரவேற்போம்.





யுத்தத்தின் சத்தங்கள்
நிசப்தத்தில்
பெரு மூச்சு ஓலங்கள்
எங்கள் நிலங்களில்

புத்தரை உணரா
பக்தரைத் தேடும்
தேசத்து வீரம்
அரச மரங்களில்

துவேஷத்தின் குரல்கள்
உச்சத்தில்
துறவிகளின் நெஞ்சங்கள்
புனிதபூமி ஆசையில்

தவிப்பை தேக்கி
இருப்பை தேடும்
சிறுபான்மை துயரம்
வட, கிழக்கு நிலங்களில்

மௌனிக்கிறோம்..
மௌனிக்கிறோம்..!

ஏன் எனில்
மௌனித்தது
ஆயுதங்கள் மட்டுமல்ல
உணர்வுகளும்தான்
என்ற சோகத்தில்

# ஏன் இந்த மௌனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடரும் டெக்ஸ்ட்...

# What is ஜீ.எஸ்.பி???

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பிறகு மாறிவரும் பொருளாதார அமைப்புள்ள நாடுகள் என்ற பெயரில் சில நாடுகள் உருவாகின. இவைகள் மத்தியப்படுத்தப்பட்ட திட்டமிட்ட பொருளாதாரத்திலிருந்து சந்தைப் பொருளாதா ரத்தை நாடி வரத் தொடங்கின.

இவைகளில் சில அபிவி ருத்தி அடைந்து வரும் நாடுகளாகும். ஏனையவை இந்த வகையைச் சேராதவை. எவ்வாறாயினும் அனைத்து நாடுகளும் ஜி.எஸ்.பி. சலுகைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சர்வதேச அபிப்பிராயம் இருந்து வந்தது. மாறிவரும் பொருளாதாரம் அமைப்புடைய நாடுகள் ஜி.எஸ்.பி. நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான உடன்படிக்கைகள் எதனையும் ஐரோப்பிய பாதுகாப்பு ஊக்குவிப்பு ஏற்பாடுகள் (சுற்றுச் சூழல் ஷரத்து) ஆகிய ஏற்பாடுகளை, பொது ஏற்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ள அனைத்து நாடுகளும் கோரிப் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆயுதங்கள் தவிர்ந்த அனைத்தும் (Everything But Arms - EBA) என்னும் சிறப்பு ஊக்குவிப்பு ஏற்பாடு, குறை அபிவிருத்தி நாடுகள் என்று ஐ.நா. சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 49 நாடுகளுக்கும் உரியதாகும்.

அபிவிருத்தி அடைந்து வரும் ஏனைய நாடுகளை விட குறை அபிவிருத்தி நாடுகள் அதிகபட்ச நலன்களைப் பெற வேண்டும் என்பது பாரம் பரியமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று ஆகும்.

இதற்கிசைவாக ஐரோப்பிய யூனியன் குறை அபிவிருத்தி நாடுகள் குறித்து மேலதிகக் கரிசனை கொண்டிருப்பதாக ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. படிப்படியாக எல்லாவகை உற்பத்திப் பொருட்களும் ஐரோப்பிய சந்தையில் பிரவேசிக்க வழிவகை செய்யப்பட்டது.

2001இல் மேலே குறிப்பிட்ட உஆஅ ஷரத்து நடைமுறைப்படுத்தப்பட்ட பின் ஆயுதங்களும் யுத்த தளவாடங்களும் தவிர்ந்த அனைத்துப் பொருட்களும் தீர் வையின்றியும் அளவுக் கட்டுப்பாடு இன்றியும் இறக்குமதி செய்யப்பட்டன.

வாழைப்பழம், அரிசி மற்றும் சீனி மீதான கட்டுப்பாடுகள் மட்டும் உடனடியாகத் தளர்த்தப் படவில்லை. இப் பொருட்கள் மீதானத் தீர்வை படிப்படியாகக் குறைக்கப் பட்டு, 2006இல் வாழைப்பழங் களின் தீர்வை முற்றாக நீக்கப் பட்டது.

சீனிக்கு ஜூலை 2009லும், அரிசிக்கு செப்டம்பர் 2009லும் ஜி.எஸ்.பி. சலுகை வழங்கப்பட இருந்ததெனினும் அது அவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகின்றதா என்பதற்கான சரியான தகவல்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

ஆனால் அரிசிக்கும் சீனிக்கும் இறக்குமதித் தீர்வைக் கோட்டா வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிய வருகின்றது.

ஏனைய சில ஏற்பாடுகள் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் புதுப்பிக்கும் செயன்முறைக்கு உட்பட்டதாகும். ஏனைய ஏற்பாடுகள் காலாவதியாகும் திகதி EBA ஏற்பாடுகளுக்கு ஏற்புடைத்ததாகாது.





## படைப்பாளிகளும் குடும்பங்களும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லில் அகப்படுமோ?

குரு அரவிந்த்

**மின்னல் அடித்ததுபோல எல்லாமே சட்டென்று நடந்துவிட்டது. அதிர்ச்சியில் இருந்து நான் மட்டுமல்ல. அவளும் மீளவில்லை என்பதை அவளது அந்தப் பிடி உணர்த்தியது. எவ்வளவு லாவகமாய் அவள் என்னைக்கடந்து சட்டென்று திரும்பி பின்பக்கமாய் வந்து என்னை இறுக்கி அணைத்தாள் என்பது எனக்கே வியப்பாக இருந்தது. தன்னைப் தள்ளி நிறுத்தினாளோ.**

அல்லது எனது ஆண்மையில் அவளுக்கு இருந்த அதீத நம்பிக்கைதான் காரணமோ தெரியவில்லை,எதுவாய் இருந்தால் என்ன, என்னை நம்பிச் சரணடைந்தவளைக் காக்கவேண்டியது எனது பொறுப்பு என்பதை உணர்ந்து அவளுக்கு அடைக்கலம் கொடுத்தேன். தற்செயலா-கத்-தான் அது நடந்தது, பாடசாலையால் வரும்போது அவளது பென்சில் பெட்டி தெருவில் விழுந்து விடவே அதைக் குனிந்து எடுக்க முயன்றபோது, முன்வீட்டு வாசலில் படுத்திருந்த நாய் தன்னைத் தாக்கத்தான் எதையோ எடுக்கிறாள் என்ற பயத்தில் அவளைத் துரத்தத் தொடங்கியது. அந்த சமயம் பார்த்து நானும் எங்கள் வீட்டுக் கேற்றைத் திறந்து வெளியே வந்தேன். அதனால்தான் பாதுகாப்புத்தேடி ஓடிவந்து அருகே நின்ற என்னைக் கட்டிப்பிடித்தாள். அழகு ஓவியம் ஒன்று இதமான உடம்பும் சதையுமாய் என்னைத் திடீரெனக் கட்டிப் பிடித்ததில் நான் அதிர்ந்து போனதென்னவோ உண்மைதான். அதுவும் சிலநாட்களாக யார்மீது எனக்கு ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டிருந்ததோ, அவளே வலியவந்து என்னை அணைப-பதென்றால்? ஒரு ஸ்லோமோஷன் காட்சிப்படம் போல அந்தக் காட்சி என் மனதில் திரும்பத்திரும்ப நிழலாடிக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. சொர்க்கத்திற்குப் போனது போன்ற அந்த இனிய சுகம் அதிக நேரம் நீடிக்கவில்லை. அதிர்ச்சியில் இருந்து அவள் மீண்டபோது, பெண்மைக்கே உரிய நாணம் அவளைச் சட்டென்று விலகி நிற்கவைத்தது.



வேர்த்து வியர்திருந்த முகத்தில் இன்னமும் பயக்களை தெரிந்தது. இப்பொழுதும் அவளது உடம்பு லேசாகப் பதறிக் கொண்டி-ருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. மூச்சு வாங்க ஓடி வந்ததில் அவளது மார்பகம் மேலும் கீழும் ஏறி இறங்கியது. பாடசாலையின் மெல்லிய வெள்ளைச் சீருடை ஆங்காங்கே வியர்-வையில் தோய்ந்து போனதில் அந்த இடத்தை மட்டும் சூரியவெளிச்சம் வட்டம் போட்டு அதிச-யமாய்க் காட்டியது. வயசுக் கோளாறோ என்னவோ எனது பார்வை சட்டென்று அங்கேபட்டுத் தெறித்தபோது, அவள் என்னை அணைத்தபோது ஏற்படாத உணர்வு அந்த வனப்பில் கிளர்ந-தெழுந்தது. வேறு நேரம் என்றால் எனது பார்வையின் உக்கிரத்தை அவள் புரிந்து கொண்டிருப்பாள், இப்போதைய நிலையில் சுயமாக இயங்க முடியாமல் தடுமாறியதில் அவள் அதைக் கவனத்தில் எடுக்கவில்லை என்பது எனக்குப் புரிந்தது. தப்பாத இடத்தில் தப்பான பார்வை என்பதால் வலிந்து பார்வையைத் திசை திருப்பினேன்.

இதிலே கொஞ்ச நேரம் இருங்க..! அருகே இருந்த மரக்குற்றியைக் காட்டிச் சொன்னேன். அவள் பாதையைத் திரும்பிப் பார்த்தபடியே தயக்-கத்தோடு உட்கார்ந்தாள். உட்கார்ந்ததும் ஓடிச்சென்று ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன்.

அதை வாங்கிய அவள் என்ன செய்வது என்று தெரியா-மல் உட்கார்ந்தபடியே என்னை மேலும் கீழும் பார்த்தாள்.

பயந்து போயிட்டீங்க, இதைக் கொஞ்சம் குடியுங்க.. என்றேன். சுயமாக இயங்கமுடியாமல் எனது வழி நடத்தலுக-காகவே காத்திருந்தவள்போல, மளமளவென்று தண்ணீரைக் குடித்தாள். ஆ யூ ஓகே..? என்று வினாவினேன்.

கனவுலகிலிருந்து கலைந்து ஓம என்று என்னை நிமிர்ந்து பார்த்துத் தலை அசைத்தவள் மீண்டும் மெல்லத் தலை குனிந்தாள். அதுவே அவள் அழகிற்கு அழகு சேர்த்தது.

ஏக்கப் பெருமூச்சு விட்டபடி மெதுவான எழுந்து வீதியத் திரும்பிப் பார்த்தபடியே வீடு நோக்கி நடந்தாள். என்-னைத்தான் திரும்பிப் பார்த்தாளோ அல்லது திரும்பவும் தன்னை அந்த நாய் துரத்தலாம் என்ற பயத்தோடு திரும்பிப் பார்த்தாளோ தெரியவில்லை. அவளுக்கு சற்றுமுன் நடந-ததை நினைத்துப் பயம் இருந்திருக்கலாம். நாய் துரத்-தாவிட்டாலும் என் மனம் அவளைப் பின்னால் துரத்திக் கொண்டே சென்றதை அவள் அறிந்திருக்க நியாயமில்லை. ஏக்கப் பார்வையோடு அவள் பிரிந்தபோது, பாரதி கண்ட கனவுகளை எனக்குச் சொந்தமாக்கிஅவளிடம் கண்ட அந்த ஆளை விழுங்கும் அழகை எனக்குள் மென்று சுவைத்துப் பார்த்தேன். நான் நானாக இல்லை என்பதை என்னைவிட்டு அவள் பிரிந்த அக்கணமே நான் உணர்ந்து கொண்டேன்.

காலங்கள் கடந்தன எண்ணங்கள் மட்டும் மௌனமாக இருந்தன நாட்டின் போர்ச் சூழல் காரணமாக நாங்கள் பயந்து பயந்தே தினமும் வாழவேண்டி வந்தது. ஒருநாள் எங்கள் ஊரைநோக்கி இராணுவம் திடீரென முன்னேறுவதாகச் செய்தி வந்தது. நாங்களும் எங்கே போவது என்று தெரியாமல் அவசரமாக இடம் பெயர்ந்தோம். உயிர் வாழ ஆசைப்பட்டு ஆளுக்கொரு திசை நோக்கிச் சென்றதால் அவளை நான் மீண்டும் சந்திக்கவில்லை. நான் புலம் பெயர்ந்து வெளிநாடு வந்திருந்தேன். அவளும் அப்படியே ஏதாவது வெளிநா-ட்டிறகுப் போயிருக்கலாம் என்று என்னைச்-சமா-தானப் படுத்திக்கொண்டு மறைமுகமாக அவளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன்.

மின்னஞ்சல்கள் தினமும் நிறைய வந்து குவிந்து கொண்டிருக்கும். இலவசம் என்பதால் விரும்பிய வர்கள் எல்லாம் திக்கெட்டில் இருந்தும் அனுப்பிக் கொண்டிருப்பார்கள். வேண்டாத வற்றை அழிப் பதே மிகவும் சிரமமாக இருக்கும். அன்றும் ஆர் வம் காரணமாக நண்பன் ஒருவன் அனுப்பிய மின் னஞ்சல் ஒன்றைத் திறந்து பார்த்தேன். வன்னியில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் பிரதி பெ-றுபவளின் பக்கம் என் கவனம் திரும்பியது. அவளே தான், இயக்கப் பெயராக இருக்கலாம் பெயர் மட்டும் மாற்றப் பட்டிருந்தது. அப்படி என்றால் அவள் அங்கேதான் இருக்கி-றாளா? இது எப்படிச் சாத்தியமாயிற்று, ஒரு நாயைக் கண்டு பயந்து அந்த ஓட்டம் ஓடியவள், துப்பாக்கி ஏந்துவாளா? என்னால் கடைசிவரை நம்பமுடியாமலே இருந்தது. தமிழர் வாழ்ந்த நிலமெல்லாம் இராணு-வத்தால் மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கப்பட்டது. யுத்தம் ஓய்ந்து வன்னி நிலம் பறிபோன-போது அவளுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. எந்த ஒரு செய்தியும் அவளைப்பற்றிக் கிடைக்கவில்லை. தினமும் வரும் திடுக்-கிடும் செய்திகளைக் கேட்கும்போதும், படங்களைக் காணொளிகளைப் பார்க்கும் போதும் அவளை நினைத்து என் மனம் வேதனையில் தடுமாறும்.

காதலர் தினத்திலன்று ரோஜாப்பூக்களை ஏந்திய கைகள் எல்லாம் அன்று கார்த்திகைப் பூக்களை ஏந்தி நின்றன. கார்த்திகைப் பூக்கள் சூடுவதற்கல்ல, அர்ப்பணிப்பதற்கே என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும் அர்பணிக்கும் அந்த மலர்கள் நிச்சயமாக அவளுக்காக இருக்கக்கூடாது என்று ஒவ்வொரு தடவையும் என்மனம் சுயநலமாய் நினைக்க-வைக்கும். ஏனோ இம்முறை மட்டும் மலர் வைக்கும்போது என்னை அறியாமலே குலுங்கிக் குலுங்கி அழுதேன். .

மண்மீது கொண்ட காதலால்
மண்ணின் மானம் காக்கத்
தன்னையே தந்த அவளது அந்த
மீள விழியில் மிதந்த வலியெல்லாம்
சொல்லில் அகப்படுமோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோதிடம்

## மே மாதப் பலன்கள்



**மேடம்** இந்த மாதத்தில் உங்களால் சிறுசிறு வெற்றிகளையும் இலாபங்களையும் தேடிக் கொள்ள முடியும். ஆனால் எல்லாமே காலதாமதமாகத் தான் கிட்டும். பெற்றோர் வகையில் சற்று அதிகமாக மருத்துவச் செலவு ஏற்படும். குடும்பத்தில் சிறு சிறு பூசல்கள் தோன்றும்



**இடபம்** குடும்பத்தில் சிறுசிறு பூசல்கள் தலை தூக்கினாலும் பெரிய பாதிப்பு ஏற்படாது. சுபச்செலவு ஏற்படும். குடும்பத்தில் பொதுவாக உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்திருக்கும் தம்பதியர் மீண்டும் ஒன்று சேர்ந்து வாழ்வார்கள்.



**மிதுனம்** இம்மாதத்தில் குடும்பத்தைப் பிரிந்து வாழ நேரிடும் என்றும் அடுத்தடுத்து ஏற்படும் பிரச்சினைகளால் மன நிம்மதியை இழக்க நேரிடும் தாறுமாறாகச் செல-வுகள் ஏற்பட்டாலும் வருமானம் மிகவும் சிறப்பாக இருக்கும். நேர்மையாகவும் உழைத்துப் பெரும் புகழ் பெறுவார்கள். பலராலும் பாராட்டப்படுவார்கள்.



**கடகம்** இந்த மாதத்தில் உங்களுடைய பொருளாதார நிலையில் முன்னேற்றமான போக்கு காணப்படும். பணத்தை நீங்கள் தேடிச் செல்ல வேண்டியதில்லை. பணம் உங்களைத் தேடி வரும். எல்லாவகையான செலவுகளையும் எளிதாகச் சமாளிப்பீர்கள். சென்ற வேலைகளை எதிர்பாராத இடங்களிலிருந்து நல்ல உதவிகள் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். வெளியூர்ப் பயணங்கள் ஆதாயத்தைத் தேடிக் கொடுக்கும்.



**சிம்மம்** இந்த மாதத்தில் இனி எல்லாவற்றிலும் தெளிவாகச் சிந்திப்பீர்கள். தயக்கமில்லாமல் நல்ல முடிவுகளை எடுப்பீர்கள். அலைபாயும் மனதை ஒரே இடத்தில நிலை நிறுத்தி நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களை எளிதாகவும் வெற்றிகரமாகவும் செய்து முடிப்பீர்கள். மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்க மாட்டீர்கள். மனதில் எப்போதும் நம்பிக்கை நிறைந்திருக்கும்.



**கன்னி** இம்மாதத்தில் நீங்கள் எதிர்பார்க்கும் ஆதாயமும் வந்து சேரும். ஆனால் முழுமையாக வராது. அரை குறையாக வந்து சேரும். புத்துணர்ச்சி அதிகரிக்கும். சுறுசுறுப்பாக செயல்பட வைக்கும். ஒரு இடத்தில் நிலையாக இருக்க முடியாது. அவ்வப்பொழுது செயல்படும் காரியங்களில் தடையும் தாமதமும் வந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். முயற்சிக்கு பலன் கிட்டும்



ஜோதிடம்
மே மாதப் பலன்கள்



**துலாம்** இம்மாதத்தில் மனைவியின் ஆரோக்கியம் அடிக்கடி பாதிக்கப்படும். கணவன். மனைவிக்குள் கருத்து வேற்றுமை தலை தூக்கும். வீட்டு நிர்வாகம் தொடர்பாக வாக்கு வாதம் உண்டாகும். திருமணப் பேச்சு வார்த்தைகள் இழுத்துக்கொண்டே போகும். அதிகப்படியான உழைப்பு காரணமாக கணவன் அல்லது மனைவி அடிக்கடி சோர்ந்து போகக் கூடும்.



**விருச்சிகம்** இம் மாதத்தில் உங்களையும் மீறிய நிலையில் உங்களிடமிருந்து தேவையற்ற வார்த்தைகள் வெளிப்படும். இடக்காகப் பேசுவது. எடுத்தெறிந்து பேசுவது. போன்றவற்றை நீங்கள் அவசியம் தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிட்டும்.



**தனுசு** இம்மாதத்தில் உங்களிடம் காணப்பட்டு வந்த மந்தத் தன்மை. மறதி. தயக்கம். மயக்கம். தடுமாற்றம் போன்றவை நீங்கும். உங்கள் மனதை நீங்கள் செய்யும் காரியங்களில் நிலை நிறுத்தி அந்தக் காரியங்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும். ஒவ்வொரு செயலும் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும். உங்களுடைய திட்டங்கள் நிறைவேறி நிறைய ஆதாயங்கள் கிட்டும்.



**மகரம்** இம்மாதத்தில் பொதுவாக நீங்கள் எந்த வேலையைத் தொடங்கினாலும் அதில் தடங்கல் ஏற்படும். அதனால் சிறு வேலையாக இருந்தாலும்கூட அதைத் தொடங்கியதும் வேகமாகச் செய்து முடித்து விட முடியாது. ஒருவேலையைச் செய்து முடிப்பதற்குள் வரிசையாக மூன்று வேலைகள் வந்து நிற்கும். உங்களுடைய உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்காது.



**கும்பம்** இம்மாதத்தில் உங்கள் பொருளாதார நிலை எப்போதும் பற்றாக்குறையாகவே இருக்கும். வருமானம் தொடர்பான செயல்களில் தடைகள். தடங்கல்கள். தாமதங்கள். இடையூறுகள் போன்றவை ஏற்படும். உங்கள் உழைப்பிக்கேற்ற ஊதியம் கிட்டாது. சில சமயங்களில் உங்கள் உழைப்பின் பயனைப் பிறர் தட்டிச் சென்று விடுவார்கள். இருப்பினும் உங்கள் செலவுகளைச் சமாளிக்கும அளவுக்கு வருமானம் வந்து விடும்.




**மீனம்** இம் மாதத்தில் தொழில். வியாபாரத்தில் பெரிய முன்னேற்றத்தை எதிர்பார்க்க வேண்டாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து நடந்து கொள்வது நல்லது. கலைஞர்கள் அதிக முயற்சியின் பேரிலேயே வாய்ப்புகளை பெற முடியும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் தலை தூக்கினாலும் பெரிய பாதிப்பு ஏற்படாது. குடும்பச் செலவு மிக அதிகமாக இருக்கும். சுபச் செலவும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sடைல்






Sடைல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பா என்றால் சும்மாவா?

**பொ**துவாகவே சமுகத்தில் பெண்களுக்கென்று ஒரு மேன்மையான இடம் உண்டு. சாதனை படைப்ப வர்களையும், திறமை உள்ளவர்களையும் பெருமைபடுத்தி அங்கிகாரமும் கிடைப்பதை கண் கூடாகப் பார்க்கிறோம். மகளிர் தினக் கொண்டாட்டமும், mother' sdayயும் அதைதான் பறைசாற்றுகின்றன. அதேசமயம் அதை தக்க வைத்துக்கொள்வதும் நம் கையில்தான் உள்ளது. ஆனால் இதே முக்கியத்துவத்தை குடும்பத்தின், சமுதாயத்தின் மற்றொரு கண்ணான கணவன், தந்தை என்ற முகங்களைக் கொண்ட ஆண்களுக்குகொடுக்கிறோமா என்ற கேள்விக்கு முழு மனதுடன் ஆமாம் என்று சொல்வதில் தயக்கம் ஏற்படத்தான் செய்கிறது.

குடும்பத்தில் அம்மாவின் பாசம், அம்மா, பெண், அம்மா மகன், மாமியார் மருமகள் என்று பெண்களை மையப் படுத்தியே இருக்கும் உறவுகளை பற்றியப் பாசத்தை தான் அதிகம் பேசுகிறோம், போற்றுகிறோம். குடும்பத்தின் நங்கூரமாக இருக்கும் ஜீவனைப் பற்றி" ஐயோ பாவம்" பேசப் படுவதும் கவனிக்க படுவதும் இல்லை நான்குறிப்பிடுவது கணவன், தந்தை என்ற முகம் கொண்ட ஆண்களை பற்றி. அதுவும் கணவன் என்பதிலிருந்து தந்தை என்ற மேல்பதவி கிடைத்தால் உள்ளதும் போச்சு!! தாய்குழந்தைகள் ஒரு உலகமாகவும் தந்தை கொஞ்சம் தனிமைப்படுவதையும் தான் பார்க்க முடிகிறது.

திருமணமானவுடன் பெண்கள், கணவன் தன்னிடம் மட்டுமே எல்லாவற்றையும் பகிர்ந்துக்கொள்ள வேண்டும் என்று நினைப் பார்கள் எண்ணங்கள் செயல்கள் என்று அவர்களின்முழு கவனமும் அன்பும் கணவனை சுற்றியே இருக்கும் ஆனால் இதெல்லாம் அடுத்த பதவிவரும் வரை தான். அதாவது தாய், தந்தை என்ற அடுத்தக் கட்டத்திற்கு போகும் போதுமேற்கூறிய அனைத்தும் பின்னுக்கு தள்ளப் படுகிறது மனைவியின் அன்பு அரவணைப்பு எல்லாம் அப்படியே குழந்தைகளிடம் திரும்பி விடுகிறது. அது இயற்கை தான். இருந்தாலும் ஒரு ஆணுக்கு அதுவரை தான் அனுபவித்து வந்த பரிமாற்றங்கள் எல்லாம் தீடிரென்று குறைந்து அல்லது நின்று போவதால் பாவம் கொஞ்சம் தடுமாறித்தான்போகிறார்கள்.

தாய்க்கு குழந்தைகளுடன் எவ்வளவு உரிமை இருக்கோ அதேயளவு தந்தைக்கும் உண்டு.

நடைமுறையில் சாத்தியப் படாமல் போவதிற்கு காரணம் தாயா இல்லை சூழ்நிலையா? சிறு குழந்தையாக தந்தையின் மார்பிலும் தோளிலும் விளையாடிய குழந்தையின் நெருக்கம் பிறகு கிடைபதில்லை காணாமலும் போய் விடுகிறது. இந்த இடைவெளி குறை வேண்டும். சில தாய்மார்கள் குழந்தை அடம் பிடிக்கும் போதோ, விஷமங்கள் செய்தாலோ, இல்லை சொல்வதைக் கேட்காமல் போனாலோ தந்தையை சொல்லியே பயமுறுத்தி தங்கள் வழிக்கு கொண்டு வருகின்றனர். அப்பா வந்ததும் அடிக்க சொல்கிறேன், அப்பாவிற்கு இது பிடிக்காது, அப்பாவிற்கு கோபம் வரும் என்றல்லாம் சொல்லி ஒரு வில்லனைப் போலவே சித்தரிக்கின்றனர். தந்தை மகனுக்கான இடைவெளி இங்கிருந்தே தொடங்குகிறது. மகளிடையே தந்தைக்கு ஏற்படும் அன்பு நாளை அவள் வேறு இடம் செல்பவள் என்ற யதார்த்தத்தை புரிந்து ஒரு எல்லைக்குள் தான் இருக்கும்.

அதனாலேயே தந்தை மகனுக்குள்ள உறவிற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்என்பதை பெண்களும் உணர வேண்டும். தந்தை மகனுக்கான உன்னத உறவு ஒரு தோழமையுடன் இருந்தால் இருவருக்கும் அதை விட பெரிய பலம் வேறொன்றும் இல்லை. அதுவும்பிள்ளையாகப் பிறந்து விட்டால் அப்பாவிற்கு அடுத்த படியாக வீட்டுப்பொறுப்பையும், கூட பிறந்தவர்களின் முன்னேற்றம் தாயை கவனித்துக் கொள்வதுபோன்ற எல்லாக் கடமையும் அவன் மேல் திணிக்கப் படுகிறது. தந்தைக்கும் மகனுக்கும் அந்த உறவின் சுகத்தை அனுபவிக்க ஒரு வாய்ப்பு இல்லாமலே போய்விடுகிறது. நடு வயதில் இருக்கும் தந்தைக்கு தன் எண்ணங்களை கனவுகளை சந்தோஷத்துடன் பகிந்துக்கொள்ள வளர்ந்த மகனின் தோள் கிடைத்ததால் அதைவிட சிறந்த பேறு வேறு இருக்கமுடியாது. அனுபவித்தால் தான் அருமை தெரியும்.

அது போல் மகனுக்கும் தன்னைதோழமையுடன் புரிந்துக் கொண்டு நடத்தும் தந்தை அமைந்தால் எவ்வளவு மகிழ்ச்சியை தரும். மற்றவர்களின் அறிவுரையோ கருத்தையோக் கேட்டு தவறான பாதையில் போகும் அபாயமும் தடுக்கப் படலாம். சிறு வயதில்உறவின் நெருக்கம் எப்படி இருந்ததோ அது இடைவெளி இல்லாமல் ஆரோக்கிமாக தொடரும் வண்ணம் அமைத்துக் கொள்வது நம்கையில் தான் இருக்கும்.

குழந்தைகளின் அந்தந்த பருவத்திற்கு ஏற்றார் போல் தந்தையும் வளர்ப்பில் தன்னை ஈடுபடுத்தி கொள்ளல் வேண்டும். பெண்களும் ஆண்களை ஒதுக்காமல் இந்த உறவின் மேன்மையை புரிந்துக் கொண்டு அந்த சுழலை குடும்பத்தில்ஏற்படுத்த முனைய வேண்டும்.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# இந்தியாவிற்குள் பிரிட்டிஷார் வர காரணமானவர் யார்?

ஆப்ரிக்காவைச் சுற்றிக்கொண்டு ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு நேரடியான கடல் வழியைக் கண்டுபிடித்தவர் வாஸ் கொடகாமா ஆவார். மகா மீகாமன் எனப் புகழ் பெற்ற ஹென்றி இளவரசர் காலம் முதற் கொண்டு இத்தகையதொரு கடல் வழி-யைக் கண்டுபிடிப்பதற்குப் போர்த்துக்கேயர்கள் முயன்று வந்தனர்.

பார்த்த லோமியோ டயஸ் என்பவர் தலைமையில் சென்ற குழுவினர் 1488 ஆம் ஆண்டில் ஆப்ரிக்காவின் தென்முனையிலுள்ள நன்னம்பிக்கை முனை வரை சென்று, அதைச் சுற்றிவிட்டு போர்த்துக்கீசுக்கு திரும்பினர். இந்தச் சாதனை, இந்தியா வுக்கு ஒரு கடல் வழியைக் கண்டு பிடிக்கும் நீண்ட கால முயற்சி விரைவிலேயே வெற்றிபெறும் என்ற நம்பிக்கையைப் போர்ச்சுக்கீசிய அரசருக்கு அளித்தது. எனினும் பல காலத்தாழ்வுகள் ஏற்பட்டன.

1497 ஆம் ஆண்டில்தான் ஒரு நாடாய்வுக் குழு இந்தியாவுக்குக் கடல்வழி காண்பதற்குப் பயணத்தைத் தொடங்கியது.

இக்குழுவிற்குத் தலைவராக வாஸ் கொடகாமாவை அரசர் தேர்ந்தெடுத்தார். இவர் ஓர் உயர்குடியில் 1430 ஆம் ஆண்டில் போர்த்துக்கீசிலுள்ள சைனஸ் ஊரில் பிறந்தவர்.

வாஸ்கொடகாமா தம் தலைமையின் கீழ் நான்கு கப்பல்களுடனும், அரபு மொழி பேசும் மொழி-பெயர்ப்பாளர்கள் உட்பட 170 ஆட்களுடனும் தமது பயணத்தைத் தொடங் கினார். அவரது குழு முதலில் வெர்தே தீவு முனைக்குச் சென்றது. பிறகு, அது ஆபிரிக்காவின் கடற்கரையோரமாக அட்லாண்டிக் பெருங்கடலில் தெற்கு நோக்கிச் சென்றது.

தென் திசையில் நெடுந்தூரம் சென்ற பிறது கிழக்கே திரும்பி நன்னம்பிக்கை முனையை அடைந்தது. பிறகு, ஆபிரிக்காவின் கிழக்கு கடற்கை-ரயோரமாக வடக்கு நோக்கிச் சென்றார். வழியில், இன்றையக் கென்னியாவின் மொம்பாசா, மாலிண்டி, நகர்கள் உட்பட, ஆட்சியிலிருந்த சில நகரங்களில் அவர் தங்கினார்.

மாலிண்டியாவில் ஓர் இந்திய மீகா மரை அவர் தம் குழுவில் சேர்த்துக் கொண்டார். அந்த இந்தியர் வாஸ்கொடகாமாவுக்கு இந்தியா செல்ல வழி காட்டினார்.

அரபிக் கடல் வழியாக 23 நாட்கள் பயணம் செய்த பிறகு 1498 ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் நாளன்று, தென்னிந்தியாவின் மிக முக்கிய மான வாணிக மையமாகிய கள்ளிக்கோட் டையை ஆண்டு வந்த இந்திய அரசன் சாமோரின் முதலில் வாஸ் கொடகா மாவை வர வேற்றான்.

ஆனால், வாஸ்கொட காமா தமக்குப் பரி சாக வழங்கிய மிக மலிவான பொருள்களைக் கண்டு சாமோரின் ஏமாற்றமடைந்தான். அதோடு, இந்தியப் பெருங்கடலின் வாணிக வழித்தடங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த முஸ்லிம் வணிகர்களும் வாஸ்கொடகாமாவுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், சாமாரினுடன் ஒரு வாணிக உடன்படிக்கை செய்து கொள்ள வாஸ்கொடகாமாவால் இயலாமற் போயிற்று. எனினும், வாஸ்கொடகாமா தம் அரசரிடன் காட்டுவதற்காக நேர்த்தியான நறுமணப் பொருள்களையும், கணிசமான எண்ணிக்கையிலான இந்தியர்களையும் கப்பலில் ஏற்றிக்கொண்டு ஓகஸ்ட் மாதத்தில் கள்ளிக்கோட்டை யிலிருந்து புறப்பட்டார்.

தாயகத்திலிருந்து வந்த பயணத்தை விட திரும்பிச் சென்ற பயணம் மிகக் கடினமாக இருந்தது. அரபிக் கடலைக் கடப்பதற்கு மட்டும் மூன்று மாதங்கள் பிடித்தன.

வழியில் பல மாலுமிகள் ஊட்டச் சத்துக் குறைவினால் ஏற்படும் சொறி கரப்பான்-பல் எகிறு வீக்க நோய் கண்டு இறந்தனர்.

இறுதியில் இரண்டு கப்பல்கள் மட்டுமே பத்திரமாகத தாயகம் சேர்ந்தன. இவற்றுள் முதற் கப்பல் 1499 ஆம் ஆண்டு ஜுலை 10 ஆம் திகதியன்று போர்ச்சுக்கல் சென்றடைந்தது. இதற்கு இரண்டு மாதங்களுக்குப் பிறகே வாஸ்கொடகாமா சென்ற கப்பல் போய்ச் சேர்ந்தது.

இந்தப் பய்ணத்தின் இறுதியில் 55 மாலுமிகள் மட்டுமே அதாவது, புறப்படும் போதிருந்தவர்களில் மூன்றில் ஒரு பகுதிக்கும் குறைவானவர்கள் மட்டுமே உயிருடன் தாயகம் திரும்பினர்.

எனினும், 1496 ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் திகதியன்று வாஸ்கொடகாமாவும் அவரது மாலுமிகளும் தலைநகர் லிஸ்பனை அடைந்தபோது அவரது ஈராண்டுக் காலப் பயணத்தின் மாபெரும் வெற்றியை அரசர் நன்கு உணர்ந்து அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளித்தார் வாஸகொடகாமா தமது பயணத்தினால், ஐரோப்பாலிருந்து இந்தியாவுக்கும், தூரக்கிழக்கு நாடுகளுக்கும் ஒரு நேரடியான கடல்வழித் தடத்தைக் கண்டுபிடித்தார்.

இதனால் ஏராளமான நாடுகள் பெரும் பயனடைந்தன. இதுவே வாஸ்கொடகாமா பயணத்தில் அடிப்படை முக்கியத்துவமாகும்.

இந்தியாவுக்கு வாஸ்கொட காமா புதிய கடல் வாணிக வழித் தடத்தைத் திறந்ததன் விளை வாக இந்தியப் பெருங்கடலின் வாணிக வழித்தடங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த முஸ்லிம்களுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது. அவர்களுடைய இடத்தைப் போர்த்துக்கேயர்கள் கைப்பற்றி கொண்டார்கள்.

அது மட்டுமின்றி, இந்தியாவுக்கும் எனினும், வாஸ்கொடகாமாவின் பயணத்தினால், மிக அதிகமான பாதிப்பு ஏற்பட்டது. ஐரோப்பா மீதோ மத்திய கிழக்கு மீதோ அன்று. மாறாக, இந்தியா மீதும், தென்கிழக்கு ஆசியா மீதும்தான் மிகப் பெரும் பாதிப்பு உண்டாகியது. 1498 ஆம் ஆண்டுக்கு முன்பு, இந்தியா ஐரோப்பாவின் தொடர்பின்றி தனிமைப்பட்டு இருந்து வந்தது.


உண்மையைக் கூறின், வரலாற்றின் பெரும் பகுதியில் ஓரளவு தன்னிறைவுடைய ஒரு தனி நாடாகவும் இயங்கிவந்தது. அவ்வப்போது, வடமேற்கிலிருந்து மட்டுமே சில அயல்நாட்டு பாதிப்புகள் ஏற்பட்டன. ஆயினும், வாஸ்கொடகாமாவின் பயணத்தால் ஏற்பட்ட கடல்வழித் தடத்தின் வாயிலாக, ஐரோப்பிய நாகரிகத்துடன் இந்தியாவுக்கு நேரடித் தொடர்பு உண்டாயிற்று.

ஐரோப்பியரின் செல்வாக்கும், வலிமையும், இந்தி யாவில் படிப்படியாக வளர்ந்து வந்தது. 19ஆம் ஆண்டின் கடைசிப் பிற்பாதிக்குள் இந்தியத் துணைக் கண்டம் முழுவ துமே பிரிட்டிஷ் குடியரசின் கீழ் அடிமைப் பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரிலேட்டிவிட்டி தியரியை தந்தவருக்கு ரிலேஷன்ஷிப்பை பராமரிக்க தெரியவில்லை!

உலகிலேயே மோசமான கணவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்தான் என்று ஒரு புத்தகத்தில் கூறப்பட்டுள் ளது. உலகிலேயே மிகப் பெரிய விஞ்ஞானியாக நாம் அனைவரும் ஐன்ஸ்டீனை நினைத்துக் கொண்டி ருக்கையில் இப்படி ஒரு குண்டைப் போட்டுள்ளார் வால்டர் ஐசக்சன். இவர் எழுதிய 'Einstein: His Life and Universe' என்ற நூலில்தான் உலகிலேயே மோசமான கணவர் ஐன்ஸ்டீன் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐன்ஸ்டீன் தொழில் ரீதியாக எத்தனையோ பெரிய சாதனைகளைப் படைத்திருந்தாலும், அற்புதங்களை நிகழ்த்தியிருந்தாலும் தனிப்பட்ட வாழ்க்கையில் எதையும் சாதிக்க வில்லை என்று அவர் கூறியுள்ளார்.

தன்னுடன் பணியாற்றிய விஞ்ஞானி மிலவா மாரிக்கைத்தான் கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்தினார் ஐன்ஸ்டீன். இவர்களது திருமண வாழ்க்கை 11 ஆண்டு காலமே நீடித்தது. இந்த 11 ஆண்டு காலமும் அவரிடமிருந்து எந்தவிதமான காதல் அணுகுமுறையும் இருந்ததில்லையாம். இருவரும், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்காக சம்பிரதாயத்திற்காக சேர்ந்து வாழ்க்கை நடத்தினார்களாம்.

தனது மனைவியை வேலைக்காரி போல நடத்தி வந்தாராம் ஐன்ஸ்டீன். அன்பையும், பரிவையும் அவர் தனது மனைவியிடம் காட்டியதில்லையாம். 11 ஆண்டு கால வாழ்க்கைக்குப் பின்னர்தான் தனது திருமண வாழ்க்கை தோல்வியடைந்த ஒன்று என்று அவருக்குப் புரிய வந்ததாம். ஐன்ஸ்டீனின் மனைவி மாரிக், ஐரோப்பாவிலேயே முதல் முறையாக கணிதம் மற்றும் இயற்பியல் படித்த முதல் பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனைக்கும் ஐன்ஸ்டீனை விழுந்து விழுந்து கவனித்தவர் மாரிக் என்பது குறிப்பிடத்தக்கது. ஐன்ஸ்டீனின் அறையை மிகச் சிறப்பாக அவர் பராமரித்து வந்தார். அவருக்கு மூன்று வேளை உணவை தவறாமல் அவரது அறைக்கே கொண்டு வந்து கொடுத்தார். உடைகளை சுத்தமாக துவைத்து தேய்த்துக் கொடுத்தார். படுக்கை அறையை சுத்தமாக வைத்திருந்தார். ஆனால் பதிலுக்கு மனைவிக்கு எந்த கைமாறும் செய்ததில்லையாம் ஐன்ஸ்டீன்.

மாறாக, மனைவிக்கு பல நிபந்தனைகளைப் போட்டு வைத்திருந்தாராம் அவர். அதாவது அருகில் வந்து உட்காரக்கூடாது, வெளியில் கூட்டிச் செல்லுமாறு வற்புறுத்தக் கூடாது. தேவையில்லாமல் தன்னுடன் பேசக் கூடாது, வெளியுலக தொடர்புகளை அதிகம் வைத்துக் கொள்ளக் கூடாது. இப்படிப் போகிறது ஐன்ஸ்டீனின் நிபந்தனைகள்.

அதை விட கொடுமை, தன்னுடன் நெருக்கமாக இருக்க வேண்டும் என்று தனது மனைவி எதிர்பார்க்கக் கூடாது என்றும் கூறியிருந்தாராம் ஐன்ஸ்டீன். எந்த வகையிலும் தன்னைக் கவர முயற்சிக்க் கூடாது. அனுமதி இல்லாமல் பேசக் கூடாது என்பதும் அந்த நிபந்தனைகளில் ஒன்று.

11 ஆண்டு கால வேதனை வாழ்க்கைக்குப் பின்னர் ஐன்ஸ்டீனை விட்டு அவரது மனைவி பிரிந்து சென்றார். கூடவே தனது பிள்ளைகளையும் அழைத்துச் சென்று விட்டார்.

ஐன்ஸ்டீன் நடத்திய இந்த லட்சணமா இல்லறத்தில் பிறந்த குழந்தைகள் இருவர். ஒருவர் ஹான்ஸ் ஆல்பர்ட். இன்னொருவர் எட்வர்ட். 1902ஆம் ஆண்டு லிசரல் என்ற மகள் பிறந்தார். பின்னர் அவரைத் தத்துக் கொடுத்து விட்டனர். பிள்ளைகளோடு ஜூரிச் சென்ற மாரிக், ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் 1919ஆம் ஆண்டு விவாகரத்து கோரினார். அது பின்னர் கிடைத்தது.

அதன் பின்னர் ஐன்ஸ்டீன் 1919ஆம் ஆண்டே எல்சா என்பவரை மணந்தார். பின்னர் அவரது செயலாளர் பெட்டி நியூமன்னுடனும் உறவு ஏற்படுத்திக் கொண்டார். அதன் பின்னர் வேறு ஒரு பெண்ணுடனும் அவருக்குப் பழக்கம் ஏற்பட்டது. ரிலேட்டிவிட்டி (சார்பியல் கோட்பாடு) தியரியை உலகுக்கு அறி வித்த ஐன்ஸ்டீனால் ரிலேஷன்ஷிப்பை (உறவுமுறையை) பராமரிக்க முடியாமல் போனது வியப்புக்குரியதுதான்... ■

# ஜிந்தாவின் கட்டிப்பிடி வைத்தியம் இல்லாது

## சோபை இழந்தது ஐ.பி.எல்



**கி**ங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் உரிமையாளர்களில் ஒருவர் பொலிவுட் நடிகை பிரித்தி ஜிந்தா. மைதானத்தில் தனது அணி வீரர்களை "கட்டிப்பிடி" வைத்தியத்தின் மூலம் கிறங்கடித்தவர். இம்முறை சினிமாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஐ.பி. எல்., தொடரில் அதிக ஆர்வம் காட்டாமல் இருப்பதாக தெரிகி றது. பல்வேறு விஷயங்கள் குறித்து பிரித்தி ஜிந்தா அளித்த பேட்டி:

***கடந்த ஆண்டு போல அணியில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை என்று தெரிகிறதே?***

அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இந்த ஆண்டில் எனது வாழ்க்கையில் நிறைய விஷயங்கள் நடந்துள்ளன. எனது படக் கம்பெனி சார்பில் தயாரிக்கப்படும் பட வேலைகளில் "பிசி"யாக உள்ளேன்.

*இந்த ஆண்டு ஐ.பி.எல்., தொடரில் என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்?*

என்ன செய்வது, என்ன செய்யக் கூடாது என, கடந்த நான்கு ஆண்டுகளாக உரிமையாளர்களாக நாங்கள் பல திட்டங்களை வகுத்துள்ளோம். இம்முறை மிகவும் "சிம்பிள்" திட்டம். அதாவது அணியின் பயிற்சியாளர் மற்றும் தலைவராக கில்கிறிஸ்ட் (செல்லமாக கில்லி) உள்ளார். என்ன செய்வது என அவருக்குத் தெரியும் என்பதால், அனைத்து பொறுப்புகளையும் அவரிடமே விட்டுவிட்டோம்.

***பஞ்சாப் அணியை விற்கப் போவதாக வந்த செய்தி குறித்து...***

வருமான வரி மற்றும் சில பிரச்சினைகளால் அணியை விற்கப் போவதாக வந்த செய்தி வதந்தி. ஏனெனில் இது என் குழந்தை. இதற்காக கடினமாக பாடுபட்டுள்ளேன். கிரிக்கெட்டில் உள்ள அனைத்தையும் கற்றுக்கொண்டுள்ள நான், எப்போதும் அணியை விட்டுப் போகமாட்டேன்.

***நீங்கள் தலாய் லாமாவின் சந்தித்த போது அவர் என்ன கூறினார்?***

தர்மசாலாவில் எங்கள் அணி பங்கேற்கும் போட்டிகள் அனைத்திற்கும் வந்துவிடுவார். ஒருமுறை எங்கள் அணி போட்டியில் தோற்றிருந்த போது மிகவும் சோகமாக இருந்தேன். அப்போது அவரிடம்,"" வெற்றிபெறவே விளையாடினோம். ஆனால் தோற்று விட்டோமே,"" என்றேன்.

அதற்கு தலாய் லாமா,"" உண்மையில் நீ வெற்றி பெற விரும்பினால், உனக்குத் தெரிந்த சினிமாவில் தான் விளையாடி இருக்க வேண்டும்,"" என்றார். நான் ஒருநாளும் களத்தில் இறங்கி "பேட்" பிடித்து விளையாடியது இல்லை. இந்நிலையில், அவர் சொன்ன வார்த்தைகளில் உள்ள உண்மையை தெரிந்து கொண்டேன். இதன் பின் சினிமாவில் கூடுதல் கவனம் செலுத்த துவங்கினேன் என்றார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கறிவேப்பிலை

பெரியோர் முதல் சிறியோர் வரை தலைவலியை உணராதவங்களே இருக்க முடியாது.. அதோடு தலைச்சுற்று வந்தால் சொல்லவே தேவையில்லை. இதிலிருந்து விடுதலை பெற இயற்கையின் வரப்பிரசாதமான கறிவேப்பிலை நமக்கு பெரிதும் உதவுகிறது. தலைச்சுற்றை அடியோடு விரட்டும் கறிவேப்பிலை தைலம் இதோ....

கறிவேப்பிலை - 200 கிராம்
பச்சை கொத்தமல்லி - 50 கிராம்
சீரகம் - 50 கிராம்
நல்லெண்ணை - 600 கிராம்
பசுவின் பால் - 200 மில்லி

கறிவேப்பிலையை காம்புகள் நீக்கி நன்றாக அரைத்துக் கொள்ளவும். பச்சைக் கொத்துமல்லியையும் மையாக அரைத்துக் கொள்ளவும்.


சீரகத்தை சுத்தம் செய்து மண் சட்டியில் போட்டு 200 மி.லி. பாலை ஊற்றி ஆறு மணி நேரம் மூடி வைத்திருந்து சீரகத்தை எடுத்து நன்றாக அரைத்துக் கொள்ளவும்.

ஒரு மண்பானையில் நல்லெண்ணையை ஊற்றி அடுப்பில் வைத்து சிறிது சூடேறியதும் அரைத்து வைத்துள்ள கறிவேப்பிலையை போடவும். ஐந்து நிமிடங்கள் மேலும் சூடேறியப் பிறகு பச்சை கொத்துமல்லியைப் போடவும். அதன் பின் ஐந்து நிமிடங்கள் கழித்து சீரகத்தையும் போட்டு, தைலப்பதம் வந்ததும் இறக்கி ஆறவிடவும். ஆறியதும் மெல்லிய துணியில் வடிகட்டிக் கொள்ளவும்.

நான்கு நாட்களுக்கு ஒரு முறை நல்லெண்ணைக்கு பதிலாக கறிவேப்பிலைத் தைலத்தை தேய்த்து குளிக்கலாம். தைலத்தை தேய்த்து குளிக்கும் அன்று குளிர்ந்த உணவு வகைகளை தவிர்க்க வேண்டும்.







# நந்தியாவட்டை

அலங்கார தாவரமாக தோட்டங்களிலும் வேலியோரமாகவும் வளர்க்கப்படும் நந்தியாவட்டை பல்வேறு மருத்துவ பயன்களை கொண்டுள்ளது. இதனது இலை, மலர், வேர், வேர்பட்டை போன்றவை மருத்துவ பயன் கொண்டவை. கண்நோய், பல்நோய் போக்க ஆயுர்வேத மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதில் அமினோ அமிலங்கள், கரிம அமிலங்கள், அதிக அளவில் காணப்படுகின்றன.

**பார்வை கோளாறு குணமடையும்:**

இலைகளின் பால் சாறு காயங்களின் மேல் பூசப்படுவதால் வீக்கம் குறையும். கண்நோய்களிலும் உதவுகிறது.

நந்தியாவட்டப் பூ வானது நேந்திரகாசம், படலம் லிங்க நாச தோஷங்கள், சிரஸ்தாப ரோகம், ஆகியவற்றைக் கெடுக்கும். இதில் ஒற்றைப் பூ இரட்டைப் பூ என்கின்ற இரண்டு இனமுண்டு. இரண்டும் ஒரே குணமுடையவை. கண்களில் உண்டான கொதிப்புக்கு இதை கண்களை மூடிக்கொண்டு மிருதுவாக ஒற்றடம் கொடுக்கக் கண் எரிச்சல் நீங்கி குளிர்ச்சியாகும்.

நந்தியா வட்டைப்பூவும் தேள் கொடுக்கிலையும் ஓர் நிறையாகக் கசக்கிக் கண்களில் இரண்டொரு துளி விட்டுக் கொண்டு வர சில தினத்தில் கண்களில் காணும் பூ எடுபடும்.

மலர்களின் சாறு எண்ணெய் கலந்து பயன்படுத்தும் போது எரிச்சல் உணர்வை மட்டுப்படுத்தும். இதன் பூக்கள் வாசனையூட்டும் பொருளாகப் பயன்படுகின்றது. இது நிறத்திற்கும் பயன்படுகிறது. இதிலிருந்து அழியாத மை தயார் செய்கிறார்கள்.

நந்தியாவட்டப் பூ 50 கிராம், களாப் பூ 50 கிராம் 1 பாட்டிலில் போட்டு நல்லெண்ணெயில் ஊறவைத்து 20 நாள்கள் வெயிலில் வைத்து வடிகட்டி ஓரிரு துளி காலை மாலை கண்ணில் விட்டுவர பூ, சதைவளர்ச்சி, பல வித கண் படலங்கள், பார்வை மந்தம் நீங்கும்.

**பல் வலி நீக்கும்:**

நந்தியா வட்டை வேரை கசாயமிட்டுக் குடிக்க வயிற்றுப் போக்கு, வயிற்றுக் கடுப்பு நீங்கும். கண் நோய் மற்றும் தோல் நோய்களை குணப்படுத்தும். வேர்ப்பட்டை வயிற்றுப் பூச்சிகளுக்கு எதிரானது. வேர் கசப்பானது. பல்வலி போக்கும். வலி நீக்கும், வேரை வாயிலிட்டு மென்று துப்பி விட பல் வலி நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








நவோதய அமைப்புகளின் வித்தியாசமான மேதின நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org